ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 20 (05-11-93) வெள்ளிக்கிழமை ஓசை 260

## மாவீரர்நாள் நிகழ்வுகள் தமிழீழம் தயாராகிறது

இவ்வாண்டுக்கான தமிழீழமாவீரர்நாளுக்காக தமிழீழம் தயாராகி வருகிறது. இம்மாதம் 27 ஆம் திகதி தமிழீழமெங்கும் அனுஷ்டிக்கப்பட இருக்கும் தமிழீழ மாவீரர் நாளுக்கான சகல முன்னேற்பாடுகளும் தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. குறிப்பாக வட தமிழீழத்தில் மாவீரர் நாளுக்கான ஏற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன மாவீரர் நாளை நினைவூட்டும் வகையிலும், [12ஆம் பக்கம் பார்க்க]

# யுத்தத்தில் வெல்லலாம் என எவரும் எண்ண வேண்டாம்

## சந்திரிகா குமாரணதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

**"வடக்கு-கிழக்கில் அரசினால் நடாத்தப்படும் யுத்தம் வெல்லும் என எவரும் எதிர்பார்க்க வேண்டாம். இந்த யுத்தத்தினால் பயன் பெறுபவர்கள் அதனை முடிவுக்கு கொண்டுவர இடமளிக்கப் போவதில்லை. 1978இல் தமிழர்கள் விடுத்த கோரிக்கைகளை பதவியிலிருந்த அரசாங்கம் நிறைவேற்றியிருந்தால் இந்தப்பிரச்சினை ஏற்பட்டிருக்காது." இவ்வாறு மேல்மாகாண முதலமைச்சா திருமதி சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்தார்.**

மேலும் அநுரா பண்டார நாயக்காவைப் பின்பற்றி சிறிமாவோ பண்டார நாயக்காவையும், திருமதி சந்திரிக்கா குமாரணதுங்காவையும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ளுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடுத்த அழைப்பை திருமதி சந்திரிகா குமாரணதுங்கா நிராகரித்துள்ளார்.

என்னைத் தூக்கில் இட்டு கொன்றாலும் பரவாயில்லை. நான் ஒருபோதும் ஐக்கிய தேசியக் கட்சியில் சேரமாட்டேன் என்று திருமதி சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறும் போது 1977ஆம் ஆண்டில்இருந்தே சிறிலங்கா சுதந்திரக் கட்சியினருக்கு ஆசைவார்த்தை கூறி அவர்களை தமது கட்சியில் சேர்த்துக்கொள்வதில் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைத்துக் கொள்வதில் ஈடுபட்டுவருகின்றனர். எமது கட்சியைச் சேர்ந்த சிலர் இவ் ஆசை வார்த்தைகளை நம்பி கட்சிமாறுகின்றனர். இதனால் எமக்கு எதுவித இழப்பும் ஏற்படாது என்றார்.

## பருத்தித்துறை கடலில் மர்ம பாய்க்கப்பல்

(வடமராட்சி)

பருத்தித்துறை கடற்பரப்பில் நேற்று மாலை 4.00மணியளவில் சென்ற பாய்க்கப்பல் ஒன்று பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இக் கடற்பரப்பில் காணப்பட்ட மேற்படி பாய்க் கப்பல் காங்கேசன்துறையை நோக்கி சென்றுகொண்டிருந்ததுசந்தேகத்தைத் தரும் வகையில் நடமாடிய இப் பாய்க் கப்பலை மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று பார்வையிட்டமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (யோ)

## எழுதுவினைஞர் பதவிக்கு மேலும் 60பேர் நியமனம்

(நமது நிருபர்)

வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சு எழுதுவினைஞர் மற்றும் அதனோடு இணைந்த சேவைகளுக்குமென மேலும் 60 பேரை தெரிவு செய்ய தீர்மானித்துள்ளது.

சிலதினங்களாக கடந்தகால வன்செயல்களால் பாதிக்கப்பட்டோர்களாக கருதப்பட்ட 91 பேர் தெரிவுசெய்யப்படுவதற்கான நேர்முகப் பரீட்சைகள் யாழ். செயலகத்தில் நடைபெற்று வருவது தெரிந்ததே.

இதனுடன்சேர்த்து மேலும் 60பேரை தெரிவு செய்ய வடக்கு கிழக்கு மாகாணஅமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. இதைஅடுத்து இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 9ஆம் 10ஆம் 11ஆம் திகதிகளில் யாழ். செயலகத்தில் நடைபெறும் எனவும் இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் இன்று செயலகத்தால் தபாலில் சேர்க்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## வீரச்சாவு

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மாதம் 25 ஆம் திகதி காலை 6.30 மணியளவில் ஆற்றைக் கடந்து கொண்டிருந்த விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் முதலையால் தாக்கப்பட்டு வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை தமிழ்வேந்தன்/ரவீந்திரகுமார் (மாணிக்கம் ரவிச்சந்திரன், மன்னம்பிட்டி மட்டக்களப்பு) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

★

மட்டக்களப்பு ஆலங்குளப் பகுதியில் கடந்த 30ஆம் திகதி முற்பகல் 11.30 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகளின் முழுநேர ஆதரவாளர் சிலுவை முத்து ஜனமோகன் (வயது 32 4 பிள்ளைகளின் தந்தை மாங்கேணி) வீரச்சாவடைந்தார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## யாழ். மாவட்டத்திற்கு 76 ஆங்கில ஆசிரியர்கள்

[கொழும்பு]

யாழ். மாவட்டத்தில் 76 பேர் ஆங்கில ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்கள் நாடுமுழுவதிலும் நடத்தப்பட்ட ஆங்கில ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தி தெரிவு செய்யப்பட்டவர்களாவர்,

புதிதாக தெரிவுசெய்யப்பட்டுள்ள இந்த ஆசிரியர்கள் கிராமப்புற பாடசாலைகளுக்கு நியமிக்கப்படவுள்ளதாக யாழ் பிராந்திய கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளதாக அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## எறிகணை வீச்சு

தீவுப் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவம் நேற்று காலை 9.30 மணியளவில் யாழ். கரையோரப் பகுதிகளை இலக்கு வைத்து எறிகணை வீச்சுகளை மேற்கொண்டது.

அராலி, மற்றும் யாழ். கொட்டடி கரையோரங்களில் எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன. (21)

## குமண நாளைவரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிற்கான அத்தியாவசிய பொருள்களின் ஒரு தொகுதியை ஏற்றிக் கொண்டு "குமண" கப்பல் நாளை பருத்தித் துறைக்கு வந்துசேருமென சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். போதனா வைத்திய சாலைக்குஉரியஇறுதிகாலாண்டிற்கான மருந்துப் பொருள்கள் மற்றும் அத்தியாவசிய பொருள்கள் என்பன இக் கப்பலில் ஏற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## அநுராவுக்கு பதவி வழங்க ஐ. தே. க. நடவடிக்கை

அடுத்த பாராளுமன்ற கூட்ட தொடரின் போது அநுராபண்டாரநாயக்க ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினராக பதவி ஏற்பார் என ஐக்கிய தேசியக்கட்சி பொதுச் செயலாளர் சிறிசேனகுரேதெரிவித்துள்ளார். இதற்குவழிசெய்யும் முகமாகஐக்கியதேசியக்கட்சி தேசியபட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் டபிள்யூ எல்.பெர்ணான்டோ ராஜினாமா செய்துள்ளார்

மேலும் திட்டமிடல் வெளிநாட்டு வாணிப வர்த்தகத் துறை அமைச்சராக எதிர்வரும் 15-ம் திகதி அநுராபண்டார நாயக்க சத்தியப் பிரமாணம் செய்து கொள்வார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## வடக்கு கிழக்கு போருக்கு 'கோப்ரா' தேவையில்லை

– ரணில் தெரிவிப்பு

[கொழும்பு]

இலங்கையில நடைபெறும் சிறியளவிலான சட்டம் ஒழுங்கை பேணும் நடவடிக்கைகளுக்கு கோப்ராபோன்ற அமெரிக்க உலங்கு வானூர்திகள் தேவையற்றவை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அமெரிக்காவிற்கு அண்மையில் விஜயம் செய்த பிரதமரிடம அமெரிக்க இராணுவம் உதவி அளிக்க முன் வந்ததா என செய்தியாளர் ஒருவர் கேட்டபோதே பிரதமர் இவ்வறு பதிலளித்தார்.

அநுரா பண்டார நாயக்கா ஐ. தே. கவில் இணைந்துள்ளமை குறித்து கருத்து வெளியிட்ட பிரதமர் ரணில் ஐ.தே.கவிற்கு எந்த மாற்றுக்கட்சியும் இப்போது இல்லை என கூறினார்.

## பயிற்சி பெறும்படைக்கு பழுதடைந்த உணவு

வடக்கு கிழக்கு இராணுவ முகாம்களில் புதிதாகச் சேர்க்கப்பட்டு பயிற்சி பெற்று வரும் இராணுவத்தினருக்குபழுதடைந்தபக்கட் உணவுகள் வழங்கப்பட்டுவருவதாக இராணுவ அதிகாரி ஒருவர் புகார் செய்துள்ளார்.

இப் பக்கட் உணவுகள்போரிடும் இராணுவத்தினருக்குஎன வாங்கப்பட்டு நீண்டகாலமாக களஞ்சியப் படுத்தப்பட்டிருந்தன எனவும் இதனால் இவை மனித பாவனைக்கு உதவாத அளவிற்குப் பழுதடைந்து விட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவ் உணவுப் பொருள்களை எவ்வாறாயினும் அகற்றிவிடும் நோக்குடனேயே இவ்வாறு பயிற்சி பெறும் இராணுவத்தினருக்கு வழங்கி வருவதாக அவ் அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

## மக்கள் விருப்பமின்றி மீளகுடியமர்த்த கூடாது

-சர்வதேச பிரதிநிதி

"மக்களின் விருப்பமின்றி அவர்களை பலவந்தமாக குடியேற்றுவதையோ அன்றி குடியமர்த்துவதையோ தமது அமைப்பு வன்மையாக கண்டிக்கின்றது"

இவ்வாறு சர்வதேச அமைப்பொன்றின வதிவிடப் பிரதிநிதி எமது நிருபர் கேட்ட கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் தெரிவித்தார் அவர் மேலும் தெரிவிக்கையில்.

இலங்கை அரசாங்கமும் வேறு சமூகஅமைப்பும் செய்து கொண்ட ஒப்பந்தத்தைத் (12ஆம் பக்கம் பார்க்க)

## நாளை படகுச்சேவை

**கிளாலி-பூநகரி படகுச் சேவை நாளை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.**

போர்மேகம் சூழ்கின்ற போது
புதிய வரலாறை நீ எழுது.

## வரி விளம்பரம்

**ஆண்டு 9கணக்கியல்**

கனிட்ட தொழில் நுட்பச் சான்றிதழ் பரீட்சைக்கான பயிற்சி நூல் குறுவினா விடை கணக்கியல் பயிற்சிக் கணக்குகள், கடந்தகால (1992) வினா விடைகள். ஆக்கம் த. தர்மராஜன். சி/ 7844

**10 11 93 மீண்டும் சனி மாற்ற**

சத்யாவின் வியாழ மாற்றப் பலன்களும்சாயிபாபாபோன்று மற்றுமோர் அவதார புருஷர் தமிழ்நாடு சிவகங்கை சித்தரின் அற்புதங்களும் அடங்கியவை. ரூ 10/-- எங்கும் விற்பனையாகிறது பூபாலசிங்கம்' மக்மிலன் புத்தகசாலைகள் யாழ்ப்பாணம். (சி6475)

**''நீமியா உரம்''**

பூச்சி புழுக்களிலிருந்து பயிர்களைப்பாதுகாக்க, மண்வளம் பெருக்கி விளைச்சலை அதிகரிக்க, அடிக்கட்டு உரத்தைக்கரையாது இறுக்கமாக வைத்திருக்க-''நீமியாஉரம்'' அண்ணாகோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது ''மில்க்வைற்'' சி/7827

**உதிரிப் பாகங்களுக்காக மணிக்கூடுகள்**

உதிரிப்பாகங்களுக்காக மணிக்கூடுகள் வாங்கப்படும், சகல மணிக்கூடுகள் றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்தப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லிவீதி(வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம், கிளை கண்டிவீதி சாவகச்சேரி. (சி/7849)

**உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்க**

சகல மணிக்கூடுகள் றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்தப்படும் (சகல மணிக்கூட்டு பற்றறிகளும் எம்மிடம் உண்டு).

டில்கா வாச் அன்றேடியோ வேக்ஸ் 284 ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம் (வானவில் கூல் பார் அருகில்). கிளை கண்டி வீதி சாவகச்சேரி. (சி/7848)

**தேவை**

தமிழ் ஆங்கில புதிய பழைய தட்டச்சு இயந்திரம் உடன் தேவை தொடர்பு ஆர். மருதலிங்கம் 8/1 அம்மன் வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம். (6469)

**மண்ணெய் விநியோகம்**

யாழ். தொழினுட்பக் கல்லூரி இறுதியாண்டு பகுதிநேர மாணவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படவுள்ளது. இது எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் வழங்கப்படும்.

**அல்வாய் வடக்கு, அரசடி விநாயகராலய**

## மஞ்சவானக் கோல விழா

1993-11-05 வெள்ளிக்கிழமை மேற்படி விழா சிறப்பாக நடைபெறவும் தமிழீழ மக்கள் அனைவரும் சகல சௌபாக்கியங்களுடன் வாழவும் விநாயகப் பெருமானை அருள் சுரக்க பிரார்த்திக்கின்றோம்.

**பருத்தித்துறை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**

மந்திகை,
புலோலி.

(6489)

தீபாவளி சிறப்புற

## எமது விசேட சேவை

கழிவு விலையில் பலவகைப் பொருட்கள் விற்பனையாகின்றன

சனி ஞாயிறு உட்பட மாலை 7. 00மணிவரை திறந்திருக்கும்

குறித்த தவணையில் தையல் செய்து கொடுக்கப்படும்

## எழிலகம்

மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்

(சி-7851)

## ஸ்ரீராம் விற்பனை நிலையம்

- பிளாஸ்ரிக்
- அலுமினிய
- எவர்சில்வர்
- பாடசாலைபுத்தகப்பை மற்றும்
- வீட்டுப்பாவனைப்பொருட்களையும் அனைத்தையும்

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள சிறந்த முன்னணி நிறுவனம்.

**இல 326, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.** (சி/7840)

## கம்பியூட்டர் பயிற்சி வகுப்புக்கள்

# BASIC LANGUAGE

**ஆரம்பம்: 10-11-1993**

- காலை, மாலை வகுப்புக்கள்
- தவணை முறையிலான மிகக்குறைந்த கட்டணம்
- கூடிய செய்முறைப் பயிற்சி

விபரங்களுக்கு:-

**North Ceylon Technical Institute**
**14- ST peter'S Lane HOSpitaL rOad JAFFNA**

(சி-7839)


## நினைவு கூருகின்றோம்...

**1993- 11- 05**

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை, மூதூர் பகுதியில் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**மேஜர் கணேஸ்** [சித்திரவேல் சிற்றம்பலம் 1-ம்படிவம் பேராறு, கந்தளாய் - திருமலை]

1988 ஆம் ஆண்டு கிழவிக்குளம் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**ரமணன்** (கதிர்காமு நந்தீஸ்வரன் இரணைஇலுப்பைக் குளம் - வவுனியா)

சாவகச்சேரிப் பகுதியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நுணாவில் மத்தியைச் சேர்ந்த சாவகச்சேரி வர்த்தக சங்கச் செயலாளரும், நாட்டுப்பற்றாளருமான -

**சரவணமுத்து செல்வராசா (மாமா)** நுணாவில் சாவகச்சேரி)

1989 ஆம் ஆண்டு திருக்கோயில் பகுதியில் ஈ. பி. ஆர். எல். எவ். மற்றும் தமிழ்த் தேசிய இராணுவத்தினரின் முகாம் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

**யோகன்** (வடிவேல் வேல்ராஜன் - கள்ளியந்தீவு, திருக்கோயில் - அம்பாறை)

**கப்டன் ஜோன்சன்** (சுந்தரலிங்கம் நிசாந்தன் - முறக்கொட்டாஞ்சேனை - மட்டு)

**கப்டன் காதர்** (வைத்தியபிள்ளை கீர்த்திசீலன் - கோயில் போரதீவு - மட்டு)

**சங்கர்/வக்கர்** (அந்தோனிப்பிள்ளை ஜெயலிங்கம்-மட்டகழி மட்டு)

**சே நசன்** (தில்லையம்பலம் ராஜு புல்லுமலை - மட்டு)

தம்பிலுவில் பகுதியில் ரெலோ மற்றும் தமிழ்த் தேசிய இராணுவத்தினரின் முகாம் மீதான தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

**முகிலன்** (இராசமாணிக்கம்ஜீவராசா- கோட்டைக்கல்லாறு- மட்டு)

அக்கரைப்பற்றுப் பகுதியில் தேசவிரோதிகளால் கொல்லப்பட்டு எமைப்பிரிந்த -

**ஹசன்** (ஆதம்பாவா ஹசன் - மாவடிச்சந்தி, மூதூர் - திருமலை)

1990 ஆம் ஆண்டு கீரிமலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**செல்வம்** (கெங்கா ஜெயகாந்தன் - பொத்துவில் 03 அம்பாறை)

**மகேஸ்** (... )

1992ஆம் ஆண்டு வளலாய், பத்தமேனி, ஒட்டகப்புலம் ஆகிய பகுதிகளிலிருந்து முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். உமைமாறன்** (முருகேசபிள்ளை ஜீவகுமார்- புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு)

**2-ம்லெப். குகன்/நீல்மன்** (சிதம்பரப்பிள்ளை இந்திரகுமார் - துன்னாலை வடக்கு)

பருத்தித்துறைக் கடற்பரப்பில் பயிற்சியின் போது கடலில் மூழ்கியதில் எமைப்பிரிந்த -


**லெப். பார்த்தீபன்/விநாயகம்** (ஐயாத்துரை பிரபாகரன் புலோலி கிழக்கு - பருத்தித்துறை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்.**

[சி-7846]


## வெலிங்டன் சந்திக்கு அருகில்



# UNIKCO
# Computer Centre

**Computer பயிற்சி நெறிகள்**

## புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

- BASIC LANGUAGE
- LOTUS 1-2-3 and MS-DOS
- dBASE III PLUS and MS - DOS
- WORD PROCESSING (Word Star Rel - 5. 5.) and MS - DOS

(வடபகுதியில் 'யுனிக்கோ' இல் மட்டும்)

7. 11. 93 – சனி, ஞாயிறு வகுப்புக்கள் ஆரம்பம்
8. 11. 93 – திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள் ஆரம்பம்

- விளக்கங்கள் யாவும் தமிழிலும் வழங்கப்படுகின்றன.
- கட்டணங்கள் தவணை முறையில்.

மேலதிக விபரங்கட்கு!

**37, Clock Tower Road, Jaffna,**

(சி-7842)


## யாழ். கடற்தொழிற்

போன்றவற்றையும் நூல்கள் பயிற்சியையும் வழங்கலாம் இதனால் மாணவர் மத்தியில் மீன்பிடித் தொழிலைப் பற்றிய அறிவை விருத்தி செய்யலாவ தொழில் மகத்துவத்தையும், மீன்பிடி பற்றிய மனப்பாங்கையும் விருத்தி செய்யவும் இப்பயிற்சி உதவும் பயிலுனர்கள் மீன்பிடிக் கற்கை நெறியில் பெறும் இயந்திரம் திருத்த அறிவை வேறு துறைகளுக்கும் பயன் படுத்தலாம்

மேலும் வடபகுதியில் இன்று நடைபெறும் நன்னீர் மீன்பிடித் தொழில் அபிவிருத்திக்குப் பேருதவியாகவும் இப்பயிற்சியை அமைத்துக் கொள்ளலாம் பயிற்சி வழங்கக் கூடியவாய்ப்பு இருந்தும்இதனை இயங்காமல் செய்துதிருகோணமலைக்குஇடமாற்றம்செய்துசிங்களஇளைஞருக்குவாய்ப்பைத் தருவதையே அரசு முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. அத்துடன் தரப்படுத்தல், வெட்டுப் புள்ளியில்பாரபட்சம் காட்டுதல், திறந்த பல்கலைக்கழகக் கிளையை இயங்காது வைத்திருத்தல் ஆகியவற்றின் மூலம் தமிழ் இளைஞர்களின் உயர் கல்விக்கு ஆப்பு வைக்கும் அரசின் சதிகளில் ஒன்றாகவே கடற்தொழில், தொழில் பயிற்சிக் கல்லூரியை மூடிவிடும் நடவடிக்கையையும் கருத வேண்டும். எனவே எமது கல்வி வளத்தைச் சீரழிக்கும் அரசின் நடவடிக்கையை நாம் அனுமதிக்கக் கூடாது.

# சிறிலங்கா சுதந்திரக் கட்சியினுள் அநுரா விளைவித்த குழப்பங்கள்

"எனது தந்தை ஆரம்பித்த ஐக்கிய தேசியக் கட்சியுடன் இன்று நான் சேர்ந்து கொண்டுள்ளேன். இன்றுஅதன் கொள்கைகள் தெளிவாக உள்ளன. எனவே அக்கட்சி மூலமாக சிறந்த சேவையைச் செய்ய முடியும் என எண்ணுகிறேன்" என்ற பிரகடனத்துடன் இரு முன்னாள் 'பிரதமர்களின் மகனும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளருமான அநுரா பண்டாரநாயக்க ஐக்கிய தேசியக்கட்சியில்இணைந்துகொண்டார்.

அநுரா பண்டாரநாயக்கவின் இவ்இணைவானது, தென்னிலங்கை அரசியலில் முக்கியமான திருப்புமுனை என தென்னிலங்கை அரசியல் விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால், பலாபலன்கள் வெளிவர சில மாதங்கள் செல்லலாம். ஆனால், தெளிவாகத் தெரிவது ஒன்றுதான் சிங்கள அரசியலில் உள்ள தீவிர வலது சாரிகள் யாவரும் ஒன்று சேர்ந்துள்ளார்கள் என்பதும் சுதந்திரக்கட்சிக்குள் பல வருடங்களாக நிலவிவந்த உட்கட்சிப் பூசல் முடிவிற்கு வந்துள்ளது என்பதே ஆகும்.

இதேவேளை, அநுராபண்டாரநாயக்க, தனது தகப்பனார் பண்டாரநாயக்கஆரம்பித்த கட்சிஎனக் கூறிக்கொண்டு ஐக்கிய தேசியக் கட்சிக்குள் போகலாம் ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து தகப்பன் வெளியேறுவதற்கும், சுதந்திரக் கட்சியிலிருந்து மகன் வெளியேறுவதற்கும் தலைமைப் பதவியைக் கைப்பற்றுவதற்குஇடம்பெற்றபோட்டியில் ஏற்பட்ட தோல்விதான் காரணம் என்பது வேடிக்கையானது.

''எனது தந்தை எந்த நோக்கத்திற்காக சுதந்திரக் கட்சியை அமைத்தாரோ அந்த நோக்கத்தை நிறைவேற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சி பாடுபடுவதாகத் தெரியவில்லை'' என அநுரா தமது பழைய கட்சியைச் சாடியுள்ளார் எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க அடிப்படையிலேயே பௌத்த சிங்கள பேரினவாதியாவார். 1915 இல் ஏற்பட்ட சிங்கள முஸ்லிம் கலவரத்திற்கு மறைமுகமாக நின்று செயற்பட்டவர் இவர் இந்த இனக்கலவரம் மூளுவதற்கு சில தினங்களுக்கு முன் இவர் கம்பளைக்குச் சென்றிருந்தார். இதனையடுத்தே முஸ்லிம் மசூதிஒன்றை பௌத்த ஊர்வலம் ஒன்று தாண்டிச்செல்வது என்றும், இவ் ஊர்வலத்தை முஸ்லிம்கள் தடுக்க முயன்றதைத் தொடர்ந்து முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் கண்டி மாவட்டமெங்கும் வெடித்ததாகவும் சொல்லப்படுகிறது. இந்த வன்முறைகளைத் தொடர்ந்து பண்டாரநாயக்க தலைமறைவானார். இவருடன் செயற்பட்ட டி. எஸ். சேனநாயக்க, சேர் பாரன் ஜெயத்திலக்கா டபிள்யூ ஏ. டி சில்வா ஆகியோர் பிரித்தானிய அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டனர்.

அதன் பின்னர். பௌத்த சிங்களவர் மத்தியில் எழுந்த இன உணர்வுகளை தன்னுடைய அரசியல் எதிர்கால நலனுக்காக முதலீடாக்கிக் கொள்ளத் தீர்மானித்து அப்போது ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து வெளியேறி சிறிலங்கா சுதநதிரக் கட்சியை ஆரம்பித்தார்.

24மணிநேரத்தில்இந்தநாட்டில் சிங்களத்தை அரசகரும மொழியாக்குவோம் என்ற கோசத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இ கட்சி 1956, 1958 ஆம் ஆண்டுகளில் இனக்கலவரங்களுக்கும் காரணமாக இருந்தது. பண்டாரநாயக்காவின் கொள்கை பௌத்த சிங்கள பேரினவாதத்திற்குத்தலைமை கொடுப்பதாகவே இருந்தது.

இந்நிலையில், தகப்பனின் வழியில் செல்வதாகக் கூறிக் கொண்டு, தகப்பனாருக்கு உறுதுணையாக நின்ற சிங்கள மகாசபை போன்ற தீவிர வலது சாரிகளுடன் தற்பொழுது பௌத்த பேரினவாதத்திற்கு தலைமை தாங்க முற்படும் டி. பி விஜேதுங்காவின் தலைமையிலான ஐ. தே.கட்சியுடன் அநுரா பண்டாரநாயக்கா இணைந்துள்ளார். இந்நிலையில் அநுரா பண்டாரநாயக்கா தகப்பனைப் போலவே இனவாதத்தை மூலதனமாகக் கொளளப் போகிறாரா என்பதே இன்றுள்ள கேள்வியாகும். ஆனால் அநுரா பண்டாரநாயக்காவின் இம்முடிவானது, நீண்ட அவரது அரசியல் வாழ்க்கையின் ஒரு திடீர் முடிவல்ல. நீண்டகால குழப்பத்தின் ஒரு முடிவாகும்.

**நிமலராஜன்**

1971 ஜே வி. பி கிளர்ச்சியின் போது சிறிமாவின் மூத்த மருமகனும் 'ஜனவேகய' என்ற பத்திரிகையின் ஆசிரியருமான குமார்ரூபசிங்க மீது எழுந்த சந்தேகத்தை அடுத்து அவர் நாட்டைவிட்டு வெளியேறிய நிலையில் அநுரா பண்டாரநாயக்கா சிறிமாவினால் அரசியலுக்குள் இழுக்கப்பட்டார். அப்போது லண்டனில் கல்வி கற்றுக்கொண்டிருந்த அநுரா பரம்பரைச் சொத்தாக சிறிலங்காவின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ள முடியும் என்ற ஆசையில் அரசியலில் புகுந்து கொண்டார்.

ஆனால் அநுரா அரசியல் வாரிசாக வருவதைஅன்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் இருந்த பலர் ஆதரிக்கவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்தவும் தாய்க்கும், மகனுக்கும் இடையில் முரண்பாடுகளை வளர்க்கும் முயற்சியில் ஜே. ஆர் ஜெயவர்தனா முனைப்பாகச் செயற்பட்டார்.

1977 பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று பிரதமரான ஜே.ஆர். ஜெயவர்த்தனாபாராளுமன்றத்தில் உரையாற்றும் போது ''இந்தியாவில் பசுவும் கன்றும் தோற்றுவிட்டன. ஆனால் இங்கு பசுவும் கன்றும் வெற்றிபெற்றுவிட்டன. இங்கு பசுதனது ஆட்சியில்பல ஊழல்களையும் அதிகார துஷ்பிரயோகங்களையும் செய்துள்ளது. எனவே இதனை விசாரிக்க விரைவில் குழுஒன்று நியமிக்கப்படும். ஆனால் பாவம் கன்று மிகவும் நல்லது அதற்கு உதவ நான் தயார்'' என்று குறிப்பிட்டார் அக்காலப் பகுதியில் தேர்தலில் இந்திராகாந்தியும் சஞ்சய்காந்தியும் தோல்வியடைந்ததும் சிறிமாவோவும் அநுராவும் வெற்றிபெற்றதையுமே ஜே. ஆர் இவ்வாறு சுட்டிக்காட்டியிருந்தார்,

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்தி அநுராவைதன்பக்கம்இழுப்பதான ஜே, ஆரின் நோக்கம் அப்பேச்சில் தெளிவாகவே தெரிந்தது இதேவேளை சுதந்திரக்கட்சியிலிருந்த வலதுசாரிப்போக்குடையவர்கள் அநுராவை ஆதரித்து வந்தனர் அப்பொழுது கட்சியிலிருந்தஇடதுசாரிப்போக்கு உடையோர் இடதுசாரிகளின் தோல்வியினால்பலவீனமுற்று இருந்தனர் இந்நிலையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமைவலதுசாரிப்போக்கிற்கு மாறும் சாத்தியக்கூறுகள் இருந்தன, எனவே அநுராவை கட்சியிலிருந்து வெளியேற்றுவதன் மூலமோ அல்லது தலைமைப்பீடத்திற்கும் அநுராவிற்கும் இடையில் பிளவை ஏற்படுத்துவதன் மூலமோ சிறிலங்கா சுதந்திரக்கட்சியைப் பிளவுபடுத்தலாம் என ஜே.ஆரால் கருதப்பட்டது.

சுதந்திரக்கட்சி ஆட்சியில் நடைபெற்ற ஊழல் அதிகார துஷ்பிரயோகம் என்பவற்றிற்கு எதிராகஜே.ஆர் ஜெயவர்த்தனாவினால் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இந்த விசாரணைக்குழு சுதந்திரக் கட்சித் தலைவியும் அத்தனகல தொகுதி உறுப்பினருமான சிறிமாவோ பண்டாரநாயக்கவையும் அவரது நிதி அமைச்சரான பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கவையும் குற்றவாளிகள் என பிரகடனப்படுத்தி அவர்களது குடியியல் உரிமையையும் பறித்தது.

இதனைத் தொடர்ந்து அத்தனகல தொகுதியில் இடம் பெற்ற இடைத் தேர்தலின் போது அநுரா தனது ஆதரவாளரான நியத்தபாலவை நிறுத்துமாறு கேட்டுக் கொண்டார். தீவிர வலது சாரிப் போக்குடைய இவர்சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியின் கோட்டே தொகுதி உறுப்பினராக பின்னர் 1977 தேர்தலில் கோட்டே தொகுதியில் தோல்வியடைந்தவராவார்.

ஆனால் சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் இருந்த இடதுசாரிப் போக்கு உடையவர்கள் இதனை கடுமையாக எதிர்த்தனர். இறுதியில் தீவிர இடதுசாரிப் போக்குடையவரும் திவுலப்பிட்டி தொகுதியில் தோல்வியடைந்தவருமான லக்ஸ்மன் ஜெயக்கொடி அத்தனகல தொகுதியின் வேட்பாளராக நியமிக்கப்பட்டார். இதனால் ஏற்பட்ட மனக் கசப்பினால் இத்தேர்தல் தொடர்பானபிரசாரக்கூட்டம்எதிலும் அநுரா கலந்து கொள்ளாது வஞ்சம் தீர்த்துக்கொள்ள முற்பட்டார்,

இவ் உட்கட்சிப் பூசல் படிப்படியாக வளர்ந்து 1981ஆம் ஆண்டில் பூகம்பமாக வெடித்தது கட்சியின் டார்லி வீதி, அலுவலகத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்டன. நிலைமை கட்டுக்கடங்காத நிலை ஏற்பட்டதை அடுத்து கட்சி அலுவலகத்திற்குள் புகுந்த பொலிசார் அலுவலகத்தை சீல் வைத்து மூடினர். கட்சி அலுவலகத்தை தம்மிடம் ஒப்படைக்குமாறு அநுரா குழுவினர் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிடம் கோரிக்கை விடுத்தனர். விடயம் நீதிமன்ற விசாரணையில் இருப்பதால் அவ்விடயத்தில் தான் தலையிடவிரும்பவில்லையென ஜே ஆர். கூறிவிட்டார்.

இறுதியில் 1981 டிசெம்பர் 9இல் வழங்கப்பட்ட உயர் நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் இவ் அலுவலகம் மைத்திரிபால சேனநாயக்கா தலைமையிலான குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. இதனால் கோபமடைந்த அநுரா கட்சிக்கு எதிரான பல நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

ஆனால் அன்று கட்சியின் ஒழுங்கு விதிகளை மீறியதற்காக அநுரா மீது நடவடிக்கை எடுக்க கட்சி தயங்கியது காரணம் அன்று கட்சியிலிருந்தபலவீன நிலையும், கட்சிக்கு ஒரு குடும்ப வாரிசு இன்மையும் அநுராவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் இருந்த தொடர்பும் ஆகும்

இதேசமயம் அநுராவின் நடவடிக்கையில் அதிருப்தியுற்றிருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா கட்சிக்கு ஒரு வாரிசு வேண்டும்என்பதற்காக தனது மகள் சந்திரிகாவையும் மருமகன் விஜயகுமாரணதுங்கவையும் கட்சியில் இணைத்து அவர்களுக்கு முக்கிய பதவிகளையும் வழங்க ஏற்பாடுகளைச் செய்தார்

இந்நிலையில் 1982 ல்இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக்கட்சி வேட்பாளராக ஹெக்டர் கொப்பேகடுவ நியமிக்கப்பட்டார், இவருக்கு விஜயகுமாரணதுங்காவும் ஆதரவு வழங்குபவராகஇருந்தார். இதன் காரணமாக சுதந்திரக் கட்சி வேட்பாளரை ஆதரித்து மேடைகளில் பேசவிரும்பாத அநுரா உடனடியாக வெளிநாடு சென்றுவிட்டார். இதனால் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் வேண்டுகோளுக்கு இணங்க தேர்தல் கூட்டங்களை விஜயகுமாரணதுங்கவே முன்னின்று நடத்தினார்.

தேர்தல் முடிவடைந்ததைத் தொடர்ந்து நாடுதிரும்பிய அநுரா தனது மைத்துனருக்கு கட்சியிலுள்ள செல்வாக்கையும் தனக்கு கட்சியில் செல்வாக்கு மங்கிச்செல்வதையும் உணர்ந்துகொண்டார். இதன்காரணமாக பழைய பகையை மறந்து மைத்திரிபால சேனநாயக்கவுடன் இணைந்துவிஜயகுமாரணதுங்கவிற்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டார்

பின்னர் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி தோல்வியடைந்த தொகுதிகளுக்குஇடைத்தேர்தல்நடாத்தப்பட்டது. இத்தேர்தலுக்கான பிரசாரத்திலும் விஜயகுமாரணதுங்க மும்முரமாக ஈடுபட்டதுடன் கம்பகா மாவட்டத்தில் மகர தேர்தல் தொகுதியில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் போட்டியிட்டார் இதற்கு சுதந்திரக் கட்சிக்குள் இருந்து எதிர்ப்பு கிளம்பியது

இதேவேளை விஜயகுமாரணதுங்கவின் வளர்ச்சியினால் ஏற்பட்ட அச்சுறுத்தலை அடுத்து குடியுரிமை கிடைக்கும் வரை காத்திருந்த சிறிமாவோ குடியுரிமை கிடைத்ததும் அநுராவுடன் உறவை வளர்த்துக் கொண்டு விஜயகுமாரணதுங்கவை கட்சியிலிருந்து வெளியேற்றினார்இதற்கு அநுராவுக்கு ஜே ஆர்- ஜெயவர்த்தனா செய்த உபதேசமும் காரணமாக அமைந்தது ஆனால்அப்பொழுதுஏற்பட்ட சிறிமா -அநுரா உறவு நீண்டகாலம் நீடிக்க முடியவில்லை இருந்தும் அநுரா மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய நிலையில் கட்சி அன்று இருந்தது இருப்பினும் தனக்கு அடுத்து ஒருவாரிசு இல்லை என்ற காரணத்தினாலேயே சிறிமாவோ அநுராவை அணைத்து வைத்திருக்க வேண்டிய நிலை இருந்தது.

பின்னர்விஜயகுமாரணதுங்க கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அவரது மக்கள் கட்சியில் பிளவுகள் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து சந்திரிகா சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டு கட்சியில் பல முக்கிய பதவிகளைஏற்றுக்கொண்டார். இதற்கு சிறிமாவின்ஆசீர்வாதமும் இருந்தது. பின்னர் இறுதியாக நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் தனிப்பட்ட ரீதியில் சந்திரிகா பெற்ற வாக்குகள் கட்சிக்கு ஒரு புதியவாரிசு ஏற்பட்டு விட்டதைக் காட்டியது,

இதனை அடுத்து அநுராவைத் தண்டிக்கும் அளவிற்கு கட்சியில் தெம்பு ஏற்பட்டது. இதேவேளை மாகாணசபைத் தேர்தலின்போது இடதுசாரிக் கட்சிகளுடன் இணைந்து பெற்ற வெற்றியை அடுத்து அநுராவிற்கும் அவரது வலதுசாரி ஆதரவாளர்களுக்கும் கட்சியிலிருந்த செல்வாக்குச் சரியத்தொடங்கியது. அவர்களிடையே கருத்து முரண்பாடுகளும் வளரத் தொடங்கின. தீவிரவலதுசாரிகள் அநுராவைத் தூண்டிவிட்டு பின்னால் நிற்கமுயற்சிசெய்தனர். ஆனால் இம்முறை கட்சிக்கு அநுராமீது நடவடிக்கை எடுக்கக்கூடிய சட்டாயத்தை ஏற்படுத்தியது சந்திரிகா உடன் இருந்தது சிறிமாவோபண்டார நாயக்காவிற்குத்தெம்பையும் பெற்றுக்கொடுத்தது இந்நிலையில் அநுராமீது கட்சியில் எடுக்கப்பட்ட நடவடிக்கையும் அதனைத் தொடர்ந்து ஐ தே.காவில் சேருவதென அநுரா எடுத்தமுடிவும் கட்கியிலுள்ள வலதுசாரி போக்கு உடையவர்களை பெரும் குழப்பத்தில் ஆழ்த்திவிட்டுள்ளது.

இதேவேளை, ஐதே கட்சியில் இணைந்துள்ள அநுரா பண்டாரநாயக்காவின் ஸ்தானம் அக்கட்சியினால் தெளிவாக ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை. பெரும்பாலும் மந்திரிப்பதவி ஒன்று வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால், ஐ.தே.கவில் அநுரா பண்டாரநாயக்காவின் ஸ்தானம் எதுவாக இருப்பினும், தந்தையின் வழியைப் பின்பற்றப் போவதாகப் பிரகடனப்படுத்திய அநுராவிற்கு தந்தை வழியில்பௌத்தபேரினவாதத்தை வளர்த்தெடுத்துச் செல்வதற்கான வாய்ப்பும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உள்வீட்டு விவகாரங்களை வெளியிட்டு தாயாரையும், தமக்கையாரையும் சந்திசிரிக்க வைக்கும்வாய்ப்பும் நிறையவே வழங்கப்படும். அதாவது சுதந்திரக்கட்சிக்கு எதிராக மட்டுமல்ல, சிறிமாவோ மற்றும் சந்திரிகா தனிப்பட்ட வாழ்க்கைக்கு எதிராகவும் அநுரா பயன்படுத்தப்படுவார் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை. மேல்மாகாண ஆளுநர் பதவியுடன் அநுராவை சம்பந்தப்படுத்தி பிரதமரணில் பிரஸ்தாபித்தமை இதற்கு சிறந்த உதாரணம்.

## இரவில் விளக்கின்றி படிக்கலாம்


மற்றவர்களுக்கு இடையூறு விளைவிக்காமல்விளக்கையெல்லாம் அணைத்து விட்டு படிக்கலாம் ஓர் அதிசய மூக்குக் கண்ணாடியைப் போட்டுக் கொள்ள வேண்டும் அதில் இரு ஒளிவீச்சு விளக்குகள் பொருத்தப்பட்டிருக்கும் நமக்கு வேண்டிய அளவு ஒளியைப் பெருக்கவும் குறைக்கவும் செய்யலாம்.

இதைக் கண்டுபிடித்த நாடு ஜப்பான்

## தென் தமிழீழத்தில் தீ!

தமிழனென்றால்
தலை அற்ற தண்டிப்பு!
''சித்தாண்டியில்''
அப்பாவி இளைஞர்களின்
தலை துண்டிப்பு!
துண்டிக்கப்படும் தலைகள்
முடிவுரையல்ல!
அவை!
தமிழீழத்தின் முன்னுரைகள்!
''அம்பாறையில்''
அதர்மத்தின் கோரங்கள்
அகதி முகாம்களிலும்
தமிழர் உயிருக்குப் பேசப்படும்
பேரங்கள்!
பண்டங்கள் விற்கும்
கல்முனைச் சந்தையில்
தமிழர் உடற்
துண்டங்கள் தொங்கினும் வியப்பில்லை!
வளம்பல நிறைந்த
''தும்பன் கேணியே'' இன்றொரு
துன்பக் கேணி!
பசுமை கொஞ்சிய''பாலையடி வட்டை''
இன்று
வெறும் பாலை வெட்டையாய்.... ..!
''கொக்கட்டிச் சோலை''யிலும்
கொலைஞர்களின் ''ஆலை''.... ..I
''மண்டூர்'' துயரமே
மண்டிய ஊராய் இன்று!
ஐம்பத்ஆறில் (1956)
சிங்களப் படையை முதன் முதலாய்
சங்கரித்த மறவர்கள் நிறைந்த
துறை நீலா வணையிலும்
உறைந்துள்ள துயரம்......
அப்பப்பா!
மட்டக்களப்பே! மட்டமாய் போனதா......?
மோகனம் பாடிய வாவி மீன்களும்
முகாரியே பாடும் இன்று
''திருக்கோணமலை''யின்
திசையெட்டும் தீ!
நறுக்கோடு தமிழ் பேச நடுங்கும் நா!
''வெருகல்'' கங்கையிலும் தமிழரின் குருதி!
ஆனால்!
வெற்றியில் உண்டு தமிழர்க்கு உறுதி!
''மூதூர்'' வயல் பரப்பெல்லாம் முள்!
பசிய நிலமெல்லாம் பாழ்!
பார்க்குமிடமெல்லாம் எதிரியின் கால்!
தம்பல கமத்தில் தணல்!
நிலா வெளியிலும் நெருப்பு!
கும்புறு பிட்டியில் வம்பர்களின் குகை!
குச்சவெளி, திரியாய் ஊர்களிலும்
அச்சுறுத்தலென்ற அனல்!
தென் தமிழீழத்தின் தென்றற்காற்றிலும்
செந்தமிழர் குருதியின் சிதறல்கள்
ஆயினும்! அங்கே
வனங்களில் வாசம் செய்யும்
வரிப்புலிகள்
மனங்களின் உறைந்துள்ள உறுதியும்
மக்களின் குருதியும்
புதிய வரலாற்றை நிச்சயம் வரையும்
அப்போது!
அத்தனை துயர்களும் மறையும்!
ஆனந்தம் எங்கணும் நிறையும்!

-நிலா தமிழின் தாசன்




# யாழ். கடற்தொழிற் பயிற்சிக் கல்லூரி அரசின் சதியால் மூடப்படும் அபாயம்

இலங்கையின் மீன்பிடித் தொழிலை விருத்தி செய்யும் நோக்கத்துடன் 1957-இன் பின்னர் மீன்பிடித் தொழிலை நவீன இயந்திர மயமாக்கும் முயற்சி ஆரம்பமாகியது. ஆயினும் வடக்கு - கிழக்கு மீனவர்கள் இந்த முயற்சியின் நன்மைகளை முழுமையாகப் பெற்றுப் பயனடைந்தார்கள் என்று கூறுவதற்கில்லை. இலங்கையில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொகையினர் அடிப்படையில் சராசரி அறுபது வீதமானோர் வடக்கிலும் கிழக்கிலும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள். ஆனால் சிறிலங்கா அரசுகளின் மாற்றாந்தாய் மனப்பான்மையால் இவர்கள் தமது வளத்தைப் பெருக்கிக் கொள்ள முடியாமல் உள்ளனர்.

அதுமாத்திரமன்றி, இக்காலகட்டத்தில் நவீன மீன்பிடிமுறைகள், நுட்பங்கள் தொடர்பான அறிவு மீனவர்கள் மத்தியில் மிகக் குறைவாகவே காணப்பட்டன மீன் உற்பத்தியும் மிகக் குறைவாகவே காணப்பட்டது. இக் குறைபாடுகளைத் தவிர்க்கும் பொருட்டு, இத்துறைசார் பயிற்சியையும், தொழில்நுட்ப அறிவையும் விருத்தி செய்வதைக் கருத்திற் கொண்டு 1963 இல் நீர்கொழும்பில் யப்பானின் உதவியுடன் ஒரு கடற்தொழில் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் பிரதேச விருத்தியைக் கருத்திற் கொண்டு தென்பகுதியில் தங்காலையிலும், கிழக்கில் மட்டக்களப்பிலும், வடபகுதியில் யாழ்ப்பாணத்திலும் தலா ஒவ்வொரு பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது தொடர்ந்தாற்போல் கொழும்பு புறநகர்ப் பகுதியான மட்டக்குளியில் கடற்தொழில் உயர்தொழில் பயிற்சி நிலையம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு சிங்களமே போதனா மொழி. நாட்டின் மொத்த மீன்பிடி உற்பத்தியில் வடக்கு - கிழக்கு மீனவர்களின் பங்களிப்பு 53-5 விகிதம் இருந்தபோதிலும் அரசின் போதனா மொழிக் கொள்கையினால் தமிழ்ப் பகுதி மீனவர்கள் உயர் செய்முறைத்திறன் பயிற்சி பெற்று ஆக்கபூர்வமான தொழில் முயற்சில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு மறுக்கப்பட்டது.

> 1973 -இல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட கடற்தொழில் பயிற்சிக் கல்லூரி அரசின் பாரபட்சமான அணுகுமுறையின் மத்தியிலும் தனது பணியை வெற்றிகரமாக ஆற்றி வந்தது. 1983 இன் பின்னர் ஏற்பட்ட இராணுவச் சூழ்நிலைகள் காரணமாக இந்நிலையம் சேதமாக்கப்பட்டு பயிற்சிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டன. மீளவும் இதனை இயங்க வைப்பதற்கான முயற்சிகள் பல தடவைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் சிறிலங்கா அரசு அதற்கான அனுமதியை மறுத்து வருகிறது.

1973 -இல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட கடற்தொழில் பயிற்சி நிலையம் அரசின் பாரபட்சமான அணுகு முறையின் மத்தியிலும் தனது பணியைத் திருப்திகரமாக ஆற்றிவந்தது. 1983 -குப் பின்னர் ஏற்பட்ட இராணுவச் சூழ்நிலைகள் காரணமாக இந்நிலையம் சேதமாக்கப்பட்டு பயிற்சிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டன. மீண்டும் இதனை இயங்க வைப்பதற்கான முயற்சிகள் பலதடவைகள் மேற்கொண்ட போதிலும் இன்றுவரை சிறிலங்கா அரசு அதற்கான அனுமதியை மறுத்து வருகிறது திறப்பதற்கு முயன்றாலும் அதை அனுமதிக்காத நிலையில் இங்கு பணிபுரியும் போதனாசிரியர்கள் மற்றும் ஊழியர்களை வேறு பகுதிக்கு இடமாற்றம் செய்து நிரந்தரமாகவே இப்பயிற்சி மையத்தை மூடி விடவும் அரசு எத்தனித்து வருகிது. இவ்வாறு இழுத்து முடிவிடுவதன் மூலம் தமிழ்ச் சமூகம் இதனால் அடையக் கூடிய நன்மைகளை இல்லாமல் செய்ய அரசு மறைமுகமாகத் திட்டமிட்டுச் செயற்படுகிறது.

### பயிறசி நிலையத்தை மாற்றும் முயற்சி

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட கடற்தொழில் பயிற்சி நிலையமானது சிறியதொரு நிறுவனமாக இருந்த போதிலும் கடற்தொழில் துறைசார்ந்த இதன் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. இங்கு மூன்று வகையான பயிற்சிகள் வழங்கப்பட்டன அவை வருமாறு:

ஃ மீன்பிடி முறைகள், கருவிகள் தொடர்பான பயிற்சி.
ஃ பழுதுபார்க்கும் பொறிமுறை வினைஞர் பயிற்சி.
ஃ படகு இயக்குதல்சார் பயிற்சி.

1973-இல் ஆரம்பிக்கப்பட்ட இப்பயிற்சி நிலையம் 1983 காலப்பகுதி வரை 384 க்கும் அதிகமான மாணவர்களைப் பயிற்று வித்துள்ளது. வடபகுதியில் பிரபல்லியமாக விளங்குகின்ற (இப்போது நடைமுறையில் இல்லை)இதனது வலை மீன்பிடி (Trawler net) முப்புரிவலை மீன்பிடி - டிஸ்கோ (Trammel Net) போன்றன விருத்தி பெற்றமைக்கும் இப்பயிற்சி நிலையமே முக்கிய காரணியாகும். அத்துடன் மீன்பிடிப் படகுகள், இயந்திரங்கள் திருத்தும் வேலைகள் கூட இந்நிலையத்தில் பயிற்சி பெற்றவர்களாலேயே பெரும்பாலும் மேற்கொள்ளப்பட்டன.

1983-க்கு முந்திய பத்து வருடகாலப்பகுதியில் 89 பேர் பழுதுபார்க்கும் பொறிமுறை வினைஞர் பயிற்சியும், 164 பேர் மீன்பிடி முறைகள், கருவிகள் தொடர்பான பயிற்சியும், 131 பேர் படகு இயக்குதல்சார் பயிற்சியும் இந்நிலையத்தில் பெற்று வெளியேறியுள்ளனர். காலவோட்டத்துடன் இந்நிலையம் தொடர்ந்தும் இயங்கியிருப்பின் 400 க்கும் அதிகமான மாணவர் மேலும் நன்மை அடைந்திருப்பர் என அனுமானிக்க முடிகிறது அரசின் தடைக் காரணிகள் மற்றும் மீன்பிடி அமைச்சின் இடையூறான மனப்பாங்கு காரணமாக நாம் எதிர்பார்த்த இலக்கை எட்ட முடியவில்லை இக்காரணிகளை இல்லாமல் செய்தால் பலர் மீன்பிடித் தொழிலில் பயிற்சி பெறும் வாய்ப்புக் கிடைக்கும் என்பதை மறக்கலாகாது.

இப்பயிற்சி நிலையத்தின் அதிபர் திரு-எம்-பிரான்சிஸ் இப்பயிற்சி நிலையத்தை மீண்டும் இயங்க வைப்பதற்கு முனைப்புடன் மேற்கொண்ட நடவடிக்கைகளும் மீன்பிடி அமைச்சினால் நிராகரிக்கப்பட்டுள்ளன அரசு வடபகுதியில் பிரகடனப்படுத்திய வலயச்சட்டம், மீன்பிடித்தடை ஆகியவற்றைச் சாட்டாகவைத்து இப்பயிற்சி நிலையத்தைத் திருகோணமலைக்கு மாற்ற மீன்பிடி அமைச்சில் முயற்சிகள் செய்யப்படுவதாகவும் அறிய முடிகின்றது இதற்கு முன்னோடி நடவடிக்கையாக போதனாசிரியர்கள் மற்றும் ஊழியர்களும் திருகோணமலைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர் இந்நிலையில் பயிற்சி நிலையம் திருகோணலைக்கு மாற்றம் செய்வதை தடுக்க பிரயத்தனம் எடுக்க வேண்டும் இப்பயிற்சி நிலையத்தை திருகோணமலைக்கு மாற்ற அம்மாவட்டத்தை சிங்களமயமாக்கும் அரசின் திட்டத்தின் ஒரு பகுதியாக இருப்பதால் இதனைத் தடுத்து நிறுத்துவதற்கும், மீளவும் திறப்பதற்கும்

**ஏ. எஸ். சூசை** புவியியற்துறை விரிவுரையாளர்
யாழ்- பல்கலைக்கழகம்

அனைவரும் ஆர்வம் காட்டல் வேண்டும் இலங்கை மீன்பிடிப் பிரதேசங்களில் உச்ச உற்பத்தியின் அடிப்படையில் 1983ஆம் ஆண்டிற்கு முற்பட்ட தரவுகளைக் கொண்டு ஆராய்ந்தால் இப்பயிற்சி நிலையத்தை யாழ்ப்பாணத்தில் பேணவேண்டிய அவசியம் புலனாகிறது.

| விநியோகப்பகுதிகள் | உற்பத்தி (தொகைகள்) | விகிதாசாரம் (பங்களிப்பு) |
|---|---|---|
| யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் | 69, 000 | 35, 6 |
| புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு | 48, 000 | 27. 2 |
| திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை | 32 000 | 17. 9 |
| காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை | 26, 300 | 14 7 |
| ஏனையவை | 8, 200 | 4.9 |

வடபகுதியானது மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய கடற்தொழில். விரிவாக்க அலுவலர் மாவட்டங்களை உள்ளடக்கியதாகும் அத்துடன் இலங்கையின் மொத்த மீனவர் தொகையில் 31.02 சத விகிதத்தினர் வடபகுதியில் உள்ளனர் மொத்த மீன்பிடியில் அதிகமான அளவு யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் ஆகிய பகுதிகளில் பிடிபடுகிறது (இன்றுள்ள இராணுவ ஆக்கிரமிப்புச் சூழலுக்கு மொத்த உற்பத்தித்தொகை பொருத்தமற்றது) அத்துடன் கடல் ஏற்றுமதிகளில் இடம் பெறுகின்ற கடலட்டை, சங்கு, இறால். நண்டு போன்றவையும் கூடுதலாக இப் பிராந்தியத்திலேயே காணப்படுகின்றன அத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கடற்தொழில் பீடமும் அமைய உள்ளது இத்தகைய வாய்ப்புக்களைக் கொண்டிருக்கும் இப்பகுதிக்கு இப்பயிற்சி நிலையம் மிகவும் அத்தியாவசியமாகும் இதனை மூடிவிட அல்லது திருகோணமலைக்கு இடமாற்ற எத்தனிக்கும் அரசின் போக்கு எமது கல்வியைக் கருவறுக்கும் முயற்சியாகும்

வடபகுதியில் தற்போது நிலவுகின்ற சூழ்நிலையிலும் பல்கலைக் கழகம், தொழில்நுட்பக் கல்லூரி, பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் வெற்றிகரமாக இயங்கிவருகின்றன இந்தநிலையில் மீன்பிடி பயிற்சி நிலையத்தை மூடிவிட அரசு முயற்சிப்பதில் அரசியல் நோக்கம் உள்ளது அரசு கடல்வலய பாதுகாப்புச் சட்டம், மீன்பிடித் தடை, பயிற்சி நிலைய உபகரணங்கள் ஆகியவற்றைக் காரணமாக வைத்து இந்நிலையத்தை இயங்காது தடைவிதித்துள்ளது ஆழ்கடலில் மேற்கொள்ளப்படும் பயிற்சியைச் செய்ய முடியாது போயினும், உள்ளக செயன்முறைப் பயிற்சிகளான வலை உருவாக்கம், முடிச்சுக்கள், இயந்திரம் திருத்துதல்,

(2ஆம் பக்கம்பார்க்க)

## சிறுகதை

# தளிரின் தாகம்

**மலரன்னை**

கிழக்கு வானம் வெளுக்கத் தொடங்கியிருந்தது மாசி மாதத்துப் பனியில் மரஞ்செடி கொடிகள் அனைத்தும் வியர்த்து நிற்பன போலப் பனித்துளிகளைத் தாங்கி நிற்கின்றன. வாசலில் சுருண்டு கிடந்த நாய் அரவங்கேட்டு உறுமியவாறு எழும்பிப் பார்த்துவிட்டு மீண்டும் சுருண்டு படுத்து விடுகிறது இரவுநேரக் கடமை முடிந்து வீடு திரும்பிய சாந்தி அந்தச் சின்னஞ் சிறு வீட்டின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைகிறாள்.

போர்வையை இறுகப் போர்த்திருந்தாலும், கதவு திறபட்டதால் வெளியே வீசிக் கொண்டிருந்த குளிர் காற்று அப்புவின் உடலைச் சில்லிடவைக்கிறது. மருமகள் வீடு திரும்பி விட்டதை உணர்ந்த அவர்,

''மேனே சாந்தி, சரியான குளிராயும் கிடக்கு கொஞ்ச நேரம் படுத்துக் கண்ணயரன் பிள்ளை. இண்டைக்கு லீவு நாள்தானே பள்ளிக்கூடமும் இல்லை. ஆறுதலாய் எழும்பித் தேத்தண்ணி வைக்கலாம்''

சாந்திக்குத் தகப்பனுக்குத் தகப்பனாக, உறவிற்கு ஒரு பற்றுக்கோடாக இருப்பவர் இந்த அப்பு ஒருவர்தான். ஆக்கிரமிப்புப்படை ஏவிய செல்லுக்கு இரையாகிய சாந்தியின் அருமைக் கணவனை ஈன்றெடுத்தவர். மருமகளிலும், பேரன்மார் இருவரிலும் உயிரையே வைத்திருந்தார்.

''மாமா வெளியிலை இருந்து இந்தப் பனியுக்கால வந்ததோ, என்னவோ எனக்கெண்டால் குளிரவேயில்லை. மளமளவெண்டு சமைச்சுப் போட்டனெண்டால் ஆறுதலாய்க் கொஞ்ச நேரம் நித்திரை கொள்ளலாம் அப்பிடி எண்டால் இரவைக்கும் வேலை செய்யச் சுகமாயிருக்கும் எண்டு நினைக்கிறன். இப்ப படுத்தாலும் வேலை கிடக்கு எண்ட நினைப்பில நித்திரையும் வராது''

மாமனாரின் சொல்லை மீறும் தயக்கத்துடன் மெதுவாகச் சொன்னாள்.

'பின்னைச் சரி பிள்ளை' அப்பு ஒப்புக் கொண்டு விட்டதும், சீருடையை மாற்றிவிட்டு அடுப்பை மூட்ட எத்தனிக்கிறாள். அப்புவும் எழும்பிப் படுக்கையைச் சுருட்டி ஒரு பக்கம்வைத்துவிட்டு வந்தார். மடியிலிருந்த சுருட்டொன்றை எடுத்து வாயில் வைத்துக் கொண்டு அடுப்படிக்குப் போனார். அங்கே, சாந்தி மூட்டிய அடுப்பு அப்போது தான் தீப்பிடித்து எரியத் துவங்கியிருந்தது. ஒரு கொள்ளியை எடுத்து வாயில் வைத்திருந்த சுருட்டைப்பற்றவைத்துக்கொண்டு புக்! ... புக்!... என்று புகையை வெளியே விட்டவாறு காலைக் கடன் கழிக்கச் சென்றார்.

பிள்ளைகள் இருவரையும் துயிலெழுப்பிவிட்ட சாந்தி, தேநீர் தயாரிப்பதில் ஈடுபட்டாள். முதலில் மாமனாருக்குக் கொண்டு போய்க்கொடுத்தாள். அவர் சிவசிவ என்று வாய்க்குள் முணுமுணுத்தவாறு தேநீரை வாங்கிச் சுவைக்கத் தொடங்கினார். சாந்தியின் மூத்த மகன் சிவதர்சன் முகம் கழுவி விட்டு வந்து, தாய் கலந்து வைத்திருந்த தேநீரை அருந்திவிட்டு பை ஒன்றுடன் கடைக்குப் புறப்பட்டான். தாய் சொல்லிவிட்ட பொருட்களைத் தாங்கள் வழமையாக வாங்கும் கடையில் வாங்கி வந்து கொடுத்தான் சாந்தி, மாமனாருக்கும் மக்களுக்கும் காலை உணவைப் பரிமாறினாள். அவர்கள் சாப்பிட்டு முடிந்தவுடன் தானும் அவசரமாக ஏனோ தானோ என்று சாப்பாட்டை முடித்துக் கொண்டாள்.

சாப்பிட்டு முடிந்ததும் சமையல் வேலையில் மும்முரமாக ஈடுபட்டாள். அவளையறியாமலே அவளது சிந்தனை கடந்தகால வாழ்க்கையை அசை போட்டது. சாந்தியின் கணவன் சங்கர், நல்ல வாட்டசாட்டமானவன். மனைவி, மக்களில் பாசத்தை அள்ளிச் சொரிந்தவன். கூட்டுறவுச்சங்கத்தில் மனேஜராக இருந்தான். சாந்தி மருத்துவத் தாதியாக தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றினாள் ஆஸ்பத்திரிக்குக் கூப்பிடு தூரத்தில் அவர்களது சொந்த வீடுவளவு இருந்தது ஒருவித பிச்சல் பிடுங்கல் என்றில்லாமல் அமைதியாய்க் கழிந்த வாழ்க்கையில் இடிவிழுந்தாற்போல் வேலைக்கென்று சென்ற கணவன் பலாலி இராணுவத்தினர் ஏவிய செல்லுக்கு இரையாகிப் பிணமாக வீடு வந்ததும், ஆமி தெல்லிப்பளைக்கு முன்னேறியதும், தானும் அப்புவும் பிள்ளைகளும் அல்லோல கல்லோலப்பட்டு உடுத்த துணியுடன் ஓடிவந்து அகதிமுகாமில் தங்கியதும், பின்னர் மானிப்பாயில் ஆஸ்பத்திரிக்குக் கிட்டதாக இந்தச்சிறிய அனெக்ஸை வாடகைக்கு எடுத்ததும், எல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக நினைவில் வந்தன.

ம்! என்ற நீண்ட பெருமூச்சொன்று அவளையறியாமலே அடிவயிற்றிலிருந்து கிளம்பியது.

'எல்லாம் முடிந்த கதை. இனி யோசித்து என்ன வரப் போகிறது இனி எனக்கென்று என்ன இருக்கு. எப்படியும் பிள்ளைகளை வளர்த்துப் படிக்க வைத்து ஆளாக்கிவிட வேண்டும்'

சிந்தனையில் ஆழ்ந்திருந்தவளை இளைய மகனின் குரல் இவ்வுலகிற்குக் கொண்டு வந்தது.

'அம்மா! அம்மோய்!' என்று அழுதபடி இளையவன் ஜெயதர்சன் ஓடிவந்து தாயின் மடியில் விழுந்தான்

பின்னால் வந்த மூத்தவன், ''அம்மா, முரளியும் சபேசனும் விளையாட்டுத் துவக்கு வைச்சுச் சுடுபடுகினம். தம்பி அதை ஒருக்காச் சுட்டுப் பாக்கத் தரச் சொல்லிக் கேக்க, அவை தரமாட்டெண்டிட்டினம். அதுக்குத்தான் அழுகிறான்''

முரளி என்பவன் அவர்கள் இருக்கும் வீட்டின் சொந்தக்காரரின் பையன். பணவசதிக்கேற்ப கர்வமும் அவனிடம் குடிகொண்டிருந்தது. சாந்தி ஜெயாவின் கன்னத்தைத் தடவியபடி,

''ஜெயாக்குட்டி, இஞ்சை பார் அம்மா சொல்லுறதைக் கேட்கவேணும். நான் இந்த முறை மருதடிப் பிள்ளையார் கோயில் திருவிழாவுக்கை பிள்ளைக்கும், அண்ணாவுக்கும் ஆளுக்கொரு துவக்கு வாங்கித் தருவன். நீங்கள் ஆசை தீர வைச்சு விளையாடலாம். பாத்தியே, அண்ணா நல்ல பிள்ளை, அழஇல்லை அவையின்ரை துவக்கைத் தரச் சொல்லி நீ கேட்டது பிழை அவை உனக்குத் தருவினமோ?''

விம்மல் சற்றுக் குறைய ''எனக்கும் அண்ணாக்கும் கட்டாயம் வேண்டித் தர வேணும் பேந்து ஏமாத்தக் கூடாது''

''நான் கட்டாயம் வேண்டித் தருவன். இப்ப அச்சாப் பிள்ளையள் ஓடிப்போய் அப்பு விட்டைக் கேளுங்கோ. எப்ப கோயில் கொடி ஏறுதெண்டு அப்புவுக்குத்தான் தெரியும்''

இருவரும் அப்புவிடம் ஓடினார்கள் இளையவன் தமையனிடம் கேட்டான். 'அண்ணா நாங்கள் அப்புவிட்டைக் கேப்பமே எங்களை எங்கடை வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போகச்சொல்லி'

'தம்பி, உனக்கென்ன விசரோ, அங்கை ஆமிக்காரன் எல்லே இருப்பான். நாங்கள் போனாச் சுட்டுப்போடுவான்'

'அப்ப நாங்கள் எப்ப போகலாம் எங்கடை வீட்டை. எனக்கெண்டால் எங்கடை வீட்டிலை இருக்கத்தான் விருப்பம்? அண்ணா, நாங்கள் என்ன மாதிரி வளவுக்கை ஓடிப்பிடிச்சு விளையாடுற நாங்கள் இஞ்சை ஒண்டும் செய்யேலாது, எங்கடை மாமரத்தில கட்டி இருந்த ஊஞ்சல் இப்பவும் இருக்குமே?'

அப்புவின் காதில் இவர்களது உரையாடல் விழுந்து விட்டது-

'சின்னவன் என்னவாம்? வீட்டை போகப்போறானோ? ஆமிக்காரன் விட்டு வைப்பனே? என்னெண்டு போறது எங்கடை வீட்டையும் இடிச்சுப் போட்டாங்களோ, விட்டு வச்சிருக்கிறாங்களோ? ஆர் கண்டது- கடவுளுக்குத்தான் வெளிச்சம்' ம்!...

டொக்! என்ற சத்தம் கேட்டது- பெரியவன் வெளியில் எட்டிப்பார்த்து விட்டு, 'அணில் கொந்தி மாங்காய் ஒண்டு விழுந்திட்டுது' சொல்லிக் கொண்டே எடுப்பதற்கு ஓடினான். வீட்டுக்காரரின் மகன் முரளியின் குரல் கேட்டது-

'அம்மா, இஞ்சை மரத்திலிருந்து விழுந்த மாங்காயை இந்த அகதிப்பெடியன் எடுக்க வாறான்'

பெரியவனுக்கு சுரீர் என்றது அப்புவிடம் ஓடிவந்து விம்மியபடி 'அப்பு என்னை ஏன் அகதிப்பெடியன் எண்டு சொன்னவன். என்ரை பேர் தெரியும் தானே முரளிக்கு. எனக்குப் பட்டம் வச்சிட்டானே அகதிப்பெடியன் எண்டு சொல்லுங்கோவன்'

'மேனே உதுக்கு நான் என்னத்தைச் சொல்லுறதெண்டு தெரியயில்லை நாங்கள் வீடு வாசல், சாமான்கள் எல்லாத்தையும் தெல்லிப்பளையில விட்டிட்டு, ஒண்டுமில்லாமல் வந்திருக்கிறமெல்லே அதுக்குத்தான் அகதி எண்டு சொல்லுகினம் போல'

'அப்பு, அப்பிடியெண்டா ஆமி இஞ்சையும் வந்து இவையும் வேறை இடத்துக்குப் போனா இவையளும் அகதியளோ?',

'ஓம் மேனே, அகதியள் தான். வெளிநாட்டுக்குப் போனாலும் அகதியள்தான் முரளியின்ரை அப்பாவும் ஒரு வேளை கனடாவிலை அகதியாய்த்தானிருப்பார் ஆனால்' அது இஞ்சை இவைக்கு விளங்காது கண்டியோ'

இவர்களது சம்பாஷனை சாந்தியின் காதுகளிலும் விழுந்துகொண்டு தானிருந்தது சின்னவனுக்கு இப்போது தான் அம்மாசொன்னது ஞாபகம் வர,

'அப்பு, மருதடிப் பிள்ளையார் கோயில் எப்ப கொடியேறும்?'

'இந்த மாதம் இருபத்தியெட்டாம்தேதியாக்கும் இன்னும் பதினைஞ்சு நாளிருக்கு பிள்ளையளை நான் திருவிழாக்குக் கூட்டிக் கொண்டு போவன்தானே'

'இல்லை அப்பு அம்மா சொன்னவ எங்களுக்குத் திருவிழாவிலை துவக்கு வாங்கித் தாறனெண்டு. தம்பியும் நானும் ஆமி- புலி விளையாட்டு விளையாடுவம்' பெரியவன் கூற, இடைமறித்த இளையவன்,

'அண்ணா நாங்கள் இரண்டு பேரும் தெல்லிப்பளைக்குப் போய் ஆமிக்காரங்களைச் சுடுவமோ'

ஜெயாவின் கதையைக் கேட்ட அப்பு பெரிதாக வாய்விட்டுச் சிரித்தார் இதைக் கவனித்துக் கொண்டிருந்த சாந்தி உணர்ச்சிவசப்பட்டவளாய் ஓடிவந்து இளைய மகனைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

ஃ ஃ ஃ

நாட்கள் நகர்ந்தன. பாடசாலைகள் விடுமுறைக்காக மூடப்பட்டு முதலாந் தவணைக்காக ஆரம்பமாகிய நாள் ஆண்டு மூன்றுக்கு வகுப்பேற்றப்பட்ட மாணவர்கள் அனைவரும் வகுப்பறையில் அமர்ந்திருந்தனர். அவர்களது வகுப்பிற்கு இடமாற்றம் பெற்று வந்த ஆசிரியை ஒருவர் புதிதாக நியமிக்கப்பட்டிருந்தார். ஆசிரியை புதியவராகையால் மாணவர்களை அறிமுகம் செய்யும் பொருட்டுச் சுமுகமாக உரையாடினார்.

'மாணவர்களே! நீங்களெல்லோரும் சின்னப் பிள்ளைகள். நீங்கள் வளர்ந்து பெரிய ஆளாய் வருவீர்கள்தானே'

ஓம் மிஸ்! ஓம் மிஸ்!! என்று எல்லோரும் கோஷமிட, ஆசிரியை அவர்களை 'ஸ்! சத்தம் போடாதையுங்கோ' என்று சொல்லி மேசையைத் தட்டி அவர்களை அடக்கினார். சில விநாடிகள் மௌனம் சாதித்து விட்டுக் கேட்டார்.

'நீங்கள் வளர்ந்து பெரியவர்களாகியதும் என்ன வேலை பார்க்க வேணுமென்று விரும்புகிறீர்கள். ஒவ்வொருவருக்கும் ஒரு விருப்பம் இருக்குமென்று நினைக்கிறன். ஒவ்வொருத்தராய்ச் சொல்லுங்கோ'

முதலில், முன் வரிசையில் இருந்தமுரளி என்றமாணவன் எழுந்தான்.

'மிஸ் நாங்கள் கனடாவுக்குப் போகப் போறம் அங்கை தான் எங்கடை அப்பா இருக்கிறார் இஞ்சை கறண்ட் இல்லை. ஒரு வசதிகளும் இல்லையாம். அம்மா சொன்னவ. என்னை அங்கை கூட்டிக் கொண்டு போய் எஞ்சினியருக்குப் படிக்க வைக்கிறதெண்டு. அதுதான் எனக்கும் விருப்பம். மிஸ் எஞ்சினியர் எண்டால் பெரிய வேலையாம் உண்மையா' சொல்லிவிட்டுப்பெருமையுடன் எல்லா மாணவர்களையும் ஒருமுறை திரும்பிப் பார்த்துவிட்டு இருக்கையில் அமர்ந்தான்.

ஜெயதர்சனின் முறை வந்தது. எழும்பினான். 'டீச்சர், நான் படிச்சுப் பெரிய ஆளாகினதும், எங்கடை வீட்டுக்குக் கிட்ட காம்ப்பிலை இருக்கிற அண்ணன்மாரோட சேர வேணும்-அவை ஆமியோடை சண்டை பிடிக்கிறவையாம். நானும் அவையைப் போல சண்டைக்குப் போய் ஆமிக்காரன்களைச் சுடவேணும்- எங்கடை வீட்டிற்குப் போக வேணும்- அங்க என்னுடைய ஊஞ்சல் இருக்கு. அதில அண்ணாவுடன் நான் விளையாட வேணும். அதுதான் எனக்கு ஆசை டீச்சர்! நான் பெரிய ஆளாய் வரக்கனநாள் செல்லுமே?'

சிறுவனின் கண்களில் தெரிந்த தாகத்தைக் கண்ணுற்ற ஆசிரியை விக்கித்துப் போய்ச் செயலற்று நின்றுவிட்டார்-

---


உபயோகிக்கத் தகாத பொருட்களின்

## ஏல விற்பனை

யாழ். செயலகத்தில் உபயோகிக்கத் தகாத தட்டெழுத்து இயந்திரங்கள், தளபாடங்கள், காரியாலய உபகரணங்கள் என்பவை 19-11-1993 வெள்ளிக்கிழமை மு. பகல் 10-00 மணிக்கு ஏலத்தில் விடப்படும். இவற்றை வேலைநாட்களில்காரியாலய நேரங்களில் செயலக களஞ்சிய நலன்புரிக்கிளையில் தொடர்பு கொண்டு பார்வையிடலாம். ஏலத்தில் பெறப்பட்ட பொருட்களை பெற்றுக்கொள்பவர்கள் பணத்தினை செலுத்தி அன்றைய தினமே செயலகத்தில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

கா. மாணிக்கவாசகர்
அரசாங்க அதிபரும்,
மாவட்ட ஆணையாளரும்.

செயலகம்,
யாழ்ப்பாணம்,
5-11-1993.

(சி-7834)

# சோமாலியாவில் அமெரிக்கரின் ‘அமைதிப் பணியின்’ அவலங்கள்

பாலகுமாரன்



மொகாதிசு தெரு வழியே இழுக்கப்படும் அமெரிக்க விமானியின் சடலம்.

சென்ற ஒக்டோபர் மாதத்தின் முதல் வாரத்தின் இரு முக்கிய நிகழ்வுகள் இன்றைய உலகின் போக்கினைக் குறிக்கும் பொருள் பொதிந்த வரலாற்றுப் பதிவுகள் ஆகிவிட்டன. ஒக்டோபர் 4-ம் திகதி ருஷ்ய சனாதிபதி ருஷ்ய நாடாளுமன்றை ருஷ்யதாங்கிகள் கொண்டு தாக்கி தனது எதிர்ப்பாளர் 200 பேர் வரை கொன்று 1000 பேர் வரை காயப்படுத்தி 1500 பேரைக் கைதாக்கிய போது யெல்ட்சினை பாராட்டி அவரது வெற்றி தமது வெற்றி என வாழ்த்துச் செய்திகள் அனுப்பின அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகம். ஆனால் அதே வாரச்சோமாலியாவில் நடைபெற்ற இன்னொரு தாக்குதல் சம்பவம் இவர்களின் முகத்தில் கரியைப் பூசியதாக அமைந்துவிட்டது. தலையை தொங்கப் போட்டார் கிளிங்டன் அமெரிக்க மக்களோ அதிர்ச்சியால் உறைந்து போனார்கள். முன்னைய வியட்னாம் போர்க்காலகட்ட அவலங்களை மனம் கொண்ட அவர்கள் சோமாலியாவுக்கு பாடம் படிப்பிக்க வேண்டும் என கோரவில்லை. சோமாலியாவில் எமக்கென்ன வேலை? வெளியேறுங்கள் உடனே என ஒரே குரலில் கோரினர். அமெரிக்க ஆதிக்க குரலை உலகெங்கும் காவிச் செல்லும் ‘டைம்’, ‘நியூஸ்வீக்’ செய்தி இதழ்களோ ‘பெரு நாசம் விளைந்தது’ என தலைப்பிட்டு காரமான செய்திகளை வெளியிட்டு அலறின. பலன்- ‘‘எனது பிள்ளைகள்வீணாக இறப்பதை நான் பார்த்துக் கொண்டு இருப்பேனா?’’ என்ற பில் கிளின்டன் ஐ.நாவைக் கேட்காமலே அதற்கு அறிவிக்காமலே அடுத்த வருடம் மார்ச் மாதம் 31 ம்திகதி அமெரிக்கப்படைகள் சோமாலியாவில் இராது என அவசரமாக அறிவிக்க நேரிட்டது. ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் என்பது போல இனிமேல் இருக்கப் போகும் புதிய உலக ஒழுங்கு எவ்வாறு இருக்கும் என்பதற்கு சோமாலியாவே தக்க முன்னோடி என்று ஆய்வாளர்கள் இப்போது கூற நேர்ந்தது இவ்வாறெல்லாம்— உணர்வலைகளை கிளப்பிய அச் சம்பவம் ஒக்டோபர் 3-ம் திகதி மொகா திசுவில் நடந்தது

அன்றுதான், அமெரிக்க— ஐ நாப் படைகளால் வேட்டையாடப்படும் சோமாலிய குழுத் தலைவர் ஜெனரல் அய்டிட்டின் மிக முக்கிய உதவியாளர்கள் மொகாதிசுவில் உள்ள ஒலிம்பிக் விடுதியில் கூடுவதாக உளவுத் தகவல்கள் கிடைத்தன. இவர்களைப் பிடிக்க அமெரிக்க இராணுவம் அதிரடி இராணுவத் தாக்குதல் திட்டமொன்றைத் தீட்டியது. இதன்படி சோமாலிய விமான நிலையத்தில் தரித்திருந்த அமெரிக்க றேஞ்சர்ஸ் (Rangers) படையைச் சேர்ந்தோரும் அதிவிசேட மீட்புப் படையணி எனக் கருதப்படும் (Delta Force) அணியைச் சேர்ந்தோரும் ஆக மொத்தம் 100 பேர் வரையான அதிரடிப்படையினர், 10இற்குமேற்பட்ட அமெரிக்க நவீன M—H 60 பிளாக்கோக் (Black Hawk) உலங்குவானூர்திகளைப் பயன்படுத்தி ஒலிம்பிக் விடுதியின் மேற்தளத்தில் இறக்கி அய்டிட் ஆதரவாளர்களை கைது செய்வது என முடிவானது ஆனால் திட்டம் படுதோல்வியில் முடிந்தது- முதலில் ஒலிம்பிக் விடுதியின் மேற்தளத்தில் இறங்கிய வீரர் பலத்த எதிர்ப்புக்குள்ளாகினர். விடுதியை சுற்றி மூன்று உலங்கு வானூர்திகள் சுட்டு வீழ்த்தப்பட்டன- தரை வழித் தொடர்பு ஏற்படுத்த வந்த அமெரிக்கப்படையினரும் வழிமறித்துத் தாக்கப்பட்டனர் பக்காரா சந்தைப் பகுதியில் பெரும் மோதலே ஏற்பட்டது. ஆனால் இங்குள்ள வியப்பு என்னவென்றால் ஏனைய ஐ நா. படையணியினர் அமெரிக்க உதவிக்கு உடன் வராததுதான். அதற்கு இருகாரணங்கள் உண்டு. ஒன்று அமெரிக்கா இத்திட்டத்தை மிக இரகசியமாக எவருக்கும்தெரியாமல் தீட்டியது- (அய்டிட்டையும் பிடிக்க முடியும் என்ற நம்பிக்கையும் இருந்ததால்)இரண்டு மொகாதிசுவின் தென் பகுதி அய்டிட்டின் செல்வாக்கு நிரம்பிய பகுதி- வீண் இழப்புக்களை இவர்கள் விரும்பவில்லை.

மோதலின் விளைவு 17 அமெரிக்க படைபலி: 77பேர் படுகாயம்; ஒருவரைக் காணவில்லை; ஒருவர் கைது; 19 அய்டிட் ஆதரவாளர் கைது: 200 சோமாலிய மக்கள் படுகொலை இத்தாக்குதல்களில் தோல்வியானது அமெரிக்க வரலாற்றில் முன்னைய ‘டெல்ரா ஒன்று’ எனப்படும் ஈரானில் சிறை வைக்கப்பட்ட அமெரிக்க கைதிகள் மீட்பு தோற்றதை ஒத்தது என்றும் முன்னர் பெய்ரூட்டில் அமெரிக்க படைத்தளம் வெடிகுண்டு வண்டியால் தாக்கப்பட்டதை ஒத்ததாகவும் கருதப்படுகின்றது. அது மட்டுமன்றி தனது உதவிக்கு ஏனையோர் வராத நிலையில் அமெரிக்கர் ஏனைய ஐ நாப் படையினரோடு மோதவும் நேரிட்டது. அது மட்டுமன்றி கொல்லப்பட்ட அமெரிக்க விமானியின் சடலம் தெருத் தெருவாக கட்டி இழுத்துச் செல்லப்பட்டு காறி உமிழப்பட்டு கற்களாலும் பொல்லுகளாலும் அடிக்கப்பட்டு இழிவு செய்யப்பட்டது (படம்)

இத்தோடு பட்டும் இச்சம்பவத்தின் பின் விளைவுகள் நிற்கவில்லை. முன்னர் தமிழீழத்தில் நடந்தவற்றை ஞாபகமூட்டும் இவை இங்கு றோ உள்ளிட்ட உளவு அமைப்புக்கள் பட்ட அவமானத்தைப் போல் உலகப்புகழ் C-I-A-யும் சோமாலியாவில் பட நேர்ந்துவிட்டது. எந்த நாட்டிலும் அரசாங்கத் தரப்பு அதிகாரிகளை விலைக்கு வாங்கி உளவுத் தகவல்களை சேகரிக்கும் C-I-A க்கு சோமாலியாவில் அரசே இல்லாததால் பெருத்த இடைஞ்சலாகி விட்டது. அது மட்டுமன்றி மிக நவீன ஒட்டுக் கேட்கும் கருவிகள் ஏனைய மிக நவீன ஒற்றாடல் முறைகளை சோமாலியாவில் பயன்படுத்தவே முடியவில்லை. அய்டிட்டுக்கு எதிரான குழுக்களின் உறுப்பினர்களை உளவாளியாக பயன்படுத்துவதும் அதிகம் பயன்தரவில்லை. அய்டிட்டின் இருப்பிடத்தை அறிவதே மிகுந்த சிரமமாகி விட்டது ஏனென்றால் அய்டிட் நேரடித் தொலைத்தொடர்பு வசதிகளைப் பயன்படுத்துவதில்லை மிகவும் சக்திகுறைந்த நடமாடும் வானொலி மூலமே அவர் தனது செய்திகளை வெளியிடுவதைக் கண்டு பிடிக்கC I A. யால் முடியவில்லை இது நவீன தொழில்நுட்ப கருவிகட்குகிடைத்ததோல்வி ஒன்றாகிறது என்கிறது ‘நியுஸ் வீக் இதழ்’. மட்டுப்படுத்தப்பட்ட குறைவான தொழில் நுட்ப அறிவு கைகொடுக்கும் வித்தை இது.

இவை மட்டுமன்றி இப்போது ஐ. நாவுக்கும் அமெரிக்காவிற்கும் சோமாலியா தொடர்பாக நிலவும் முரண்பாடுகள் மிக வெளிப்படையாகிவிட்டன. தனது படைவீரர் பாதுகாப்பிற்கென இப்போது புதிதாக சோமாலியாவுக்கு அனுப்பப்பட்ட படைவீரர் ஐ- நாவின் ஆணைக்கு கீழ் வரமாட்டார்கள் என அமெரிக்கா கூறி விட்டது-(சோமாலியாவில் உள்ள ஐ. நா படையணியிடையே ஒற்றுமையில்லை-பக்காரா சந்தையடிச் சண்டையின்போதுஏனையஐ-நாப்படையணியினர்உதவிமிக காலம் தாழ்த்தி கிடைத்ததாக அமெரிக்கா கோபப்படுகிறது) அது மட்டுமன்றி ஐ- நாவின் அமைதி முயற்சிகளில் தனது நம்பிக்கையீனத்தை காட்டுவது போல தனது பிரதி நிதியாக இராசதந்திரியொருவரை ஐ. நாவின் அமைதி முயற்சிகட்கு புறம்பாக இப்போது அமெரிக்கா அனுப்பிவிட்டது. சோமாலியாவில் உள்ள சகல குழுக்களோடும் குறிப்பாக அய்டிட்டோடும். இவர் பேசுவார் என தெரிகின்றது. எனவே அடுத்த வருடம் மார்ச் 31 ம் திகதி வெளியேற்றம் கௌரவமாக அமைவதை அமெரிக்கா விரும்பும் ஆவல் இதிலிருந்து தெரிகின்றது. எனவே அமெரிக்கா பச்சைக் கொடி காட்டியதால் அய்டிட் தான் பிடித்து வைத்திருந்த அமெரிக்கப் படைவீரரை விடுதலை செய்துவிட்டார் இத்தகைய நிலையில் ஐ- நாவின் நிலை இக்கட்டாகி விட்டது- ஏனைய பிரான்சு, இத்தாலி, பெல்ஜியம் படைகளும் வருட இறுதிக்குள் தாமும் வெளியேறப் போவதாக கூறிவருகின்றன. மிஞ்சுவது இந்திய,பாக் படைகள் தான். இதன் பின்னரும் ஐ.நா. அமைதிப்படை சோமாலியாவில் இருக்க வேண்டும் ‘இவ்வாறாக ஐ நா. எவ்வாறு தனித்துப் போனது என்பது எவர்க்கும் விளங்காத நிலையாகி விட்டது.

தற்போதைய உலக ஒழுங்கின் இன்னொரு பரிமாணம் மேற்குலகம் தமது இயலாமைக்கு பலிக் கடாவக்க ஐ. நா.வைபயன்படுத்தப்படும் விதமாகும். இப் போது அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகம் சோமாலியாவை உதாரணம் காட்டி ஐ நாச் செயலர் பூட்ரோஸ்காலி செயற்படும் விதத்தை கண்டிக்கத் தொடங்குகின்றன மேற்குலகப் பத்திரிகைகளோ பூட்ரோஸ்காலியின் ஆளுமை, அவர் விடயங்களைக் கையாளும் முறை எல்லாவற்றையும் குறை கூறத் தொடங்கி விட்டன. கடந்த டிசம்பர் மாதம் அவர் பொசுனிய தலைநகர் சரயேவோ சென்ற போது, பின்பு மொகாதிசு சென்ற போதும் அவரை மக்கள் கொலை காரன் என்றும் கற்களால் எறிந்தும் அவமானப் படுத்திய சம்பவங்களை எடுத்துக்காட்டி பெரிதுபடுத்துகின்றன. அதேபோல் சோமாலியாவில் ஐ நா செயலரின் தன்னிச்சையான போக்கால் அமைதிப் பணியை விட அய்டிட்டைப் பிடிப்பதிலேயே காலம் செலவழிக்கப்பட்டது என அவர் இப்போது கண்டிக்கப்படுகிறார்.

ஆனால் தொடக்கத்திலிருந்தே சோமாலிய விவகாரத்தை நினைத்தபடி இவர்கள் எல்லோரும் கையாண்ட விதமே அபத்தமானது கடந்த டிசம்பர் மாதம் தானாகவே 28 000 படையினரை அமெரிக்கா அனுப்பியது பின் இவ்வருடம் மே மாதம் அளவில் தனது பணியை ஐ. நா விடம் பாரப்படுத்திவிட்டு பெருமளவு படையை திரும்பப் பெற்றது ஐ நா வால் மெற்கொள்ளப்பட்ட அமைதிப் பேச்சுக்கள் தன்னை ஓரம் கட்ட நடக்கும் சதி எனக் கருதிய அய்டிட் திடீரென ஐ நாப் படைகள் மீது பாய்ந்தார்- பலன் யூன் மாதம் 24 பாக்- படைவீரர் கொல்லப்பட ஐ நா கடும் போக்கினை இவர் தொடர்பாக பின்பற்றி தேடப்படும் கொலைகாரன் என விளம்பரம் செய்தது, அப்போது பூட்ரோஸ் காலி அய்டிட்டை கைது செய்ய அமெரிக்க டெல்ரா படையினரே (Delta Force) பிரித்தானிய (Sas) படையினரைத் தருமாறு கேட்ட போதும் அவை மறுக்கப்பட்டன. பின் அமெரிக்க வீரரும் கொல்லப்படத் தொடங்கவே கதை மாறியது இப்போது பழியாவும் செயலர் மீதே போடப்படுகின்றது. ஐ நா. செயலரோ இப்போது வெளிப் படையாகவே பேசத்

[10ஆம் பக்கம் பார்க்க]

# "வீடியோ திரைப்படத் தணிக்கை ஓர் அவசியமான நடவடிக்கை"

சமீபத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தினர் அறிவித்துள்ள வீடியோ திரைப்படங்கள் திரையிடுதல்களுக்கான கட்டுப்பாடும், வீடியோ திரைப்பட தணிக்கை முறையும் நிச்சயம் வரவேற்கப்படவேண்டிய நடவடிக்கைகள்- தமிழீழத்தில், குறிப்பாக யாழ்குடாநாட்டில் இதுவரை காலமும் தொடர்ந்து வந்த வீடியோத் திரைப்பட திரையிடுதல்களின் முறைகேடுகளும் இன்று வெளிவரும் தமிழக சினிமாக்களின் தரமும், மக்களிடையே கருத்துக்களை எளிதில் இட்டுச் செல்லும் வீடியோக் கலையை எவ்வளவு தூரம் துஷ்பிரயோகம் செய்துள்ளன என்பதை ஆராய்ந்தால் இத்தணிக்கை முறை எவ்வளவு சரியானது என்பதை உணர முடியும்-

கல்விக்கான சூழ்நிலைகள், வசதிகள் அருகிவிட்ட இன்றைய இந்நிலையில், மணவர்களின் சிந்தனைகளை கீழ்த்தரமான இரசனைகளுக்கு கொண்டு செல்வனவாக இத் திரைப்படங்கள் காணப்படுகின்றன- இரண்டு மணித்தியாலங்களில், வாழ்வின் சகல தடைகளையும் - தாண்டி வரும் கற்பனை வாத, நம்பமுடியாத தீர்வுகள், இச்சிறார்களின் மனதில் ஆழப்பதிந்து விடுமானால், இவர்கள் நாளை எதிர்கொள்ளப் போகும் வாழ்வின் மேடு பள்ளங்களையும், தோல்விகளையும் எவ்வாறு தாங்கிக் கொள்ளப் போகின்றனர்? பாலியல் ரீதியான, வன்முறைக்காட்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் இத் தமிழ் சினிமாக்கள், இந்தச் சிறார்களின் ஒளிமயமான சிந்தனைகளுக்கு இருட்டைக் கொடுபபதை பெற்றோர் அனுமதிக்கத்தான்போகின்றனரா? எமது சமூகம், எதிரியினால் திட்டமிட்டு பல வகை அழுத்தங்களுக்கும் உள்ளாகி, அவ் அழுத்தங்களை எதிர்த்து வரும் இன்றைய நிலையிலும் எமதுசிறார்களைதடம் மாறிச் செல்ல வைக்கும் இவ்வாறான திரைப்படங்கள் தேவைதானா? என்பன ஒவ்வொரு பெற்றோரும் சிந்திக்க வேண்டும்.

தமிழ்நாட்டினைப்பொறுத்தவரையில் எவ்விதமான சமூக நோக்குமின்றி, பணம் சம்பாதித்தலையே பிரதானமாகக் கொண்டு தயாரகும் இத் திரைப்படங்கள், தமிழ்நாட்டினை எவ்வாறு சினிமா கவர்ச்சி மாயைக்கு இட்டுச் செல்கிறது என்பது நாமறிந்த ஒன்று. இவ்வகையில், விடுதலைச் சிந்தனையுடன், அடிமைவிலங்கொடிக்க வீறு கொண்டெழும் ஈழ இனமும் இவ்வாறு மாயையில் மாள்வதை எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தணிக்கைமுறை தொடர்பாகவும், திரையிடுதல்களுக்கான நேரக் கட்டுப்பாடுகள் குறித்தும் விடுதலைப் புலிகள் கலை, பண் பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு புதுவை இரத்தினதுரை அவர்கள் விபரிக்கையில்,

ஒரு தனிமனிதனுடைய இரசனையை தடுக்கவோ, அவனை இறுக்கமான நிலைப்பாட்டுக்குள் வாழவைக்கவோ நாம் விரும்பவில்லை. ஆனால், தமிழினத்தின் வாழ்வுக்கான, விடுதலைக்கான ஒட்டு மொத்தமான போராட்டமொன்று இங்கு நடைபெறுகையில், இந்தப் போராட்டத்திற்கு குந்தகம் விளைவிக்கும், மாசு கற்பிக்கும் எதையும் நாம் பார்த்துக் கொண்டும் இருக்க முடியாது.

வீடியோ திரைப்படக் கலை எம் மக்களுடைய வாழ்வையும், போராட்டத்தினுடைய வளர்ச்சியையும் முன்னெடுத்துச் செல்ல தகுந்த சாதனமாக நாம் கருதிக் கொள்கிறோம். இந்நிலையில், வெளிநாடுகளிலிருந்து, குறிப்பாக தென்இந்திய தமிழ் சினிமாக்கள் பல போராட்டத்திற்கு குந்தகம் விளைவிப்பது மட்டுமல்ல எம்மக்களுடைய நெறிப்படுத்தப்பட்ட வாழ்வையே சீர் குலைப்பதாக இருக்கிறது.

குறிப்பாக இளைய தலைமுறையினர் திரைப்படங்களில் காணும் காட்சி போலவே, தங்களுடைய வாழ்வும் அமைந்து விடுவதாக, கற்பனை வாழ்வொன்றை உருவகித்துக் கொள்கின்றனர் இப்படியான வாழ்வை இவர்கள் அமைக்க முயலும் போது யதார்த்த நிலை எதிர்க்கிறது. தங்களுடைய உலகம் அப்படியல்ல என்பதை உணர்ந்து விரக்தியின் விளிம்புக்கு தள்ளப்படுகின்றனர். இந்த திரைப்பட போதை நிலை, நாளைய எங்கள் தமிழீழ சமூகம், உலகம் வியக்கும் உன்னத சமூகமாக அமைய வேண்டுமென்று நாங்கள் நினைப்பதற்கு மாறான வழிக்கு கொண்டு செல்லும் வகையில் அமைகின்றது இக் கற்பனாவாத திரைப்படங்கள் கொடுக்கின்ற உணர்வில் வளர்த்தெடுக்கப்படும் இளைய தலைமுறையிடம் நாளை வென்றெடுக்கப்போகும் எம் நாட்டை ஒப்படைப்பது எவ்வாறாகப் போகும் என்ற ஆதங்கம் எம்மிடமுள்ளது. எனவேதான் ஓர் ஆரோக்கியமான சமூகத்துக்கு அடித்தளமிடும் நோக்குடன் இத்தணிக்கை முறையினை அறிமுகப் படுத்துகிறோம்.

தொடர்ச்சியாக இரவு முழுவதும் வீடியோ திரைப்படங்களை திரையிடுவோர். அடுத்த வீட்டில் நோயாளியாக இருக்கும் ஒருவரையோ, பரீட்சைக்கு படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களையோ, தூக்கமின்றித் தவிக்கும் வயோதிபர்களையோ கணக்கிலெடுப்பதில்லை. அவஸ்தைப்படும் அடுத்த வீடுகளிலுள்ள கர்ப்பிணிப் பெண்களைப் பற்றியும் இவர்கள் சிந்திப்பதில்லை இக்காரணங்களினாலேயே இரவு 10 மணிக்கு பின்னர் திரைப்படங்களை திரையிடுவதை தவிர்த்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தணிக்கை சபையினைப் பொறுத்தவரையில், மதங்களையும் பெண்களையும் இழிவுபடுத்தும் வகையிலான திரைப்படங்களையும், கலையம்சங்கள் ஏதுமற்ற, போராட்டத்திற்கு குந்தகம் விளைவிக்கக் கூடிய, சமூகச்சீர்கேடுகளை தூண்டக் கூடிய திரைப்படங்களையும் தணிக்கைச் சபையின் பார்வைக்கு கொண்டு செல்லப்படும்.

மேற்கூறப்பட்ட, வேண்டத்தகாதவற்றை அலசி ஆராய்ந்து தணிக்கை செய்வதற்காக இந்து, கிறிஸ்தவ மதகுருமார் இருவரும், பெண் ஒருவரும், கலை இலக்கியவாதிஒருவரும், ஒரு போராளியும் தணிககைச் சபையில் இடம்பெறுவர் எனத் தெரிவித்தார் திரு. புதுவை இரத்தினதுரை அவர்கள்.

இந்த நடைமுறையை, பல தரப்பட்ட மக்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்களினடிப்படையிலேயே அறிமுகம் செய்துள்ளோம். எனவே மக்கள் அனைவரும், இதை உணர்ந்து எமக்கு ஒத்துழைப்பு தரவேண்டும் எனவும்கேட்டுக்கொண்டார். இவ் விதம் சமூகச் சீர்கேடுகளை தூண்டுவனவாக அமையும், திரைப்படங்களில் தணிக்கை முறையின் அவசியம் பற்றி சமூகத்தின் பலதரப்பட்டநிலைகளிலிருந்து சிலரின் கருத்துக்களும் பெறப்பட்டன.

> மக்களிடம் கருத்துக்களை இலகுவாக சென்றடையச் செய்யும் வீடியோ திரைப்படக்கலை சமூகச் சீர்கேகேளை தூண்டவல்ல தென்னிந்திய திரைப்பட்ங்களால் குறிப்பாக தமிழ்த் திரைப்படங்களை திரையிடுவதால் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது தணிக்கை முறை இந் நிலையை மாற்றி, மக்களுக்கு தேவையானவற்றை கொண்டு செல்லவல்ல நிலையை உருவாக்கும்.

உறவினர் வீடுகளிலும், நண்பர்கள் வீடுகளிலும் படிக்க வேண்டிய சமயங்களில் ஆவலின் உந்துதலால் தமிழ்த் திரைப்படங்கள் பார்க்கச் செல்வேன். உண்மையில் இத் தமிழ்த் திரைப்படங்களும் ஒரு வகை போதைவஸ்துக்கள் தான். எவ்வாறு போதைவஸ்துக்கள் ஒருவனை கொஞ்சம் கொஞ்சமாக அடிமை கொள்கின்றனவோ, அவ்வாறே இன்றைய தமிழ் சினிமாக்களும், சமூக ஒழுக்க கேடுகளை வளர்ப்பனவாகவே உள்ளன. இரவு முழுவதும் படங்கள் பார்த்தால் அடுத்தநாள் பாடசாலைக்கு செல்ல முடிவதில்லை. இது ஓர் உடனடி பாதிப்பு இந்நிலையில், கலை பண்பாட்டுக் கழகத்தினர் அறிவித்துள்ள தணிக்கை முறை எம்மைப் பொறுத்தவரையில் எமக்கு நாமே விதிக்கும் சுய கட்டுப்பாடாகும் எனக் கூறினார் மானிப்பாய் இந்துக்கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன் பகீரதன். இணுவிலைச் சேர்ந்த திருமதி மலர் என்ற தாய் ஒருவரின்கணிப்பின்படிஎமதுபிரதேசத்துக்குள் நிச்சயம் தடையே செய்யப்பட வேண்டிய பல தமிழ்த் திரைப்படங்கள் புகுந்துள்ளன. இவற்றிற்கு மூல காரணம் வீடியோ நிலையங்களே. கொஞ்சக்காலம் நின்றுபோயிருந்தன, இந்நிலையங்களின் வெளியீடுகள் புற்றீசல் போல் அதிகரித்துள்ளன. இந்நிலையங்களை கட்டுப்படுத்துவதன் மூலம் எமது சமூகத்திற்கு வேண்டத்தகாத திரைப்படங்கள் எமது பிரதேசத்தினுள் ஊடுருவதை தடுக்க முடியும்.

அண்மையில் வலி வடக்குப் பகுதியில் இரவு நேர எறிகணைத் தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில், எங்களுக்கு அருகிலுள்ள வீடொன்றில் இரவு ஒரு மணியையும் கடந்து திரைப்படங்கள் திரையிடப்பட்டுக்கொண்டிருந்தன. ஒருபுறத்தில் எம் மக்கள் உயிரிழந்தும், படுகாயமடையும் இந்நேரங்களில் இத்தகைய கேளிக்கைகள். தேவைதானா? என அவர் வினா எழுப்புகிறார்.

இந்தத் தணிக்கை முறையைப் பற்றிமுணுமுணுப்பவர்களும் உண்டு இதற்கு சுன்னாகத்தைச் சேர்ந்த ஆசிரியர்திரு இராசரத்தினம் கூறிய கருத்து சிறந்த பதிலுரையாக உள்ளது மக்களை வழி நடத்திச் செல்வதுடன் மக்களை சீர்குலைக்கும் சமூகக்கேடுள்ள நடவடிக்கைகளை களைவதும் ஒரு நிர்வாக அமைப்பின் நிச்சயமான கடமைகளில் ஒன்றாகும். இந்த வகையில், தணிக்கை முறையினை நாம் ஏற்றுக் கொள்கிறோம் எனத் தெரிவித்தார் அவ் ஆசிரியர்

தமிழ் ஈழத்தின் பெண் இலக்கிய கர்த்தாக்களில் ஒருவரான திருமதி. கோகிலா மகேந்திரன், தன் கருத்தை விபரிக்கையில், ''குழந்தை கேட்கிறதே என்பதற்காகச் சாக்கடையில் விழுந்துள்ள ஐஸ் கட்டியை எடுத்து எந்தத் தாயும் தரமாட்டாள்'' என்று எழுத்தாளர் விக்ரமன் ஒரு முறைஎழுதினார். அதுதன் விடயம். சமுதாயம் என்பது ஒரு குழந்தை, அந்தக் குழந்தையை நல்லபடி வளர்க்கும் பொறுப்பு, அங்கு வாழும் அறிஞர்கள், சான்றோர், கல்விமான்கள் ஆகியோருக்கும் அரசுக்கும் உண்டு. இவர்கள் செவிலித் தாயாக இருந்தால் வளர்ப்பும் ஏனோ, தானோ என்றிருக்கும். ''சமுதாயம் தமது குழந்தைதான்'' என்ற பிரக்ஞை உள்ள நல்ல தாயாக இவர்கள் இருந்தால் சமுதாயத்திற்கு, அதை வழி நடத்தும் விடயங்கள் பற்றி விழிப்பாக இருப்பார்கள்.

அவ்வகையில், சக்திவாய்ந்த ஒரு சாதனமாகிய திரைப்படங்களில் கூறப்படும் கருத்துக்கள், சரியானது, பெருமைக்குரியது என்ற எண்ணம் யாரும் சொல்லாமலே சமூகத்தில் புகுந்து விடும் இந் நிலையில், எமது விடுதலைப் போராட்டத்தின் முன்னெடுப்புக்கும்' சமூகத்தின் சரியான வழி நடத்தல்களுக்கும் திரைப்படங்கள் தணிக்கை செய்யப்பட வேண்டியது என்பதில் எவ்வித அபிப்பிராய பேதமும் இருக்க முடியாது சமுதாயம் என்ற குழந்தை நோய் நொடி இன்றி ஆரோக்கியமாக வளர அதுமிக இன்றியமையாத தொன்றாகும் என அவர் தெரிவித்தார்.

**ரகுராம்**

# ஆக்கபூர்வமான பலிகளுக்கு பயன்படும் அணுக்கரு ஆற்றல்

அணுக்கருக்கள் தன்னிச்சையாகவோ செயற்கையாகவோ சிதைவுறுவதை கதிரியக்கம் என அழைக்கின்றனர். இவ்வாறு உருவாகும் கதிர்களின் தன்மையை 1896-ம் ஆண்டளவில் ஹென்றி பெக்குரல் என்பவர்கண்டறிந்தார். இத்தகு கதிர்வீசல்களின் தன்மையையும், இவற்றின் உருவாக்கல் நோக்கல்களையும் ஆய்வுகளுக்குட்படுத்தி ஆராய்ந்தபோது, இன்றைய விஞ்ஞான உலகின் ஒப்பற்ற ஒரு சக்தி வளமாக கதிரியக்கம் உருவாகும் நிலை அடையப் பெறப்பட்டுள்ளது.

கதிரியக்கத்தின் பயன்களை எடுத்து நோக்கும்போது, அதனாலுண்டாகும் தீய விளைவுகளின் பாதிப்பு மிக குறைவாகவேயிருப்பதை கண்டறிந்த இவ்விஞ்ஞான உலகம் ஆக்கப்பணிகளில் இவ் அணுவாற்றலை தகுந்தபடி பயன்படுத்திவருகிறது இவ்வகையில் அணு உலைகளை அமைப்பதன் மூலம் மின்சாரத்தை மிக குறைந்தசெலவீனத்துடன் உற்பத்தி செய்தல் இன்று உலகளாவிய ரீதியில் பயன்படுத்தப்பட்டுவருகிறது. அணு உலைகளில் உண்டாக்கப்படும் அதிகூடிய வெப்பசக்தியானது நீரை நீராவியாக மாற்றும் வெப்ப பரிமாற்று முறைமூலம் பெறப்படும் நீராவியினைக் கொண்டு சுழலிணைகளை சுழற்றுவதன் மூலம் மின்பிறப்பாக்கிகளை இயக்க மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. இவ்வகையில் மண்ணில் அமையும் நிரந்தரமான அணு உலைகளைத்தவிர, நடமாடும்அணு உலைகளாக இயங்கும் கப்பல்களும் இன்று இயங்குகின்றன. இவை, துருவங்களினூடுசெல்லும்போது பனிக்கட்டிகளை உடைப்பதற்கும், கப்பல்களில் இயந்திர இயக்கங்களை மேற்கொள்வதற்கும் உதவுகின்றன.

கிளர்வூட்டிப் பகுத்தல் Activation Analysis என்னும் முறைமூலம் பாறைகள், மண்வகைகள் என்பவற்றிலிருக்கும் சிறியளவிலான கனிமங்கள் கண்டு பிடிக்கப்படுகின்றன குற்றவியல் துறையில், கடத்தப்பட்டு வரும் போதைப்பொருட்களை கிளர்வூட்டிப் பகுத்தலின் மூலம் பெறப்படும் கதிரியக்கத்தினை, வெவ்வேறு நாடுகளிலிருந்து பெறப்படும் பௌதிக கணியங்களை கிளர்வூட்டிப்பகுப்பதன் மூலம் பெறப்படும் கதிர்வீசலோடு ஒப்பிடுவதன் மூலம் கடத்தப்பட்ட பொருட்கள் எங்கிருந்து வருகின்றது என்பதை அறியமுடிகிறது. மர்மக் கொலைகளில் கொலை செய்யப்பட்டவரின் உடலில் இருக்கும், சில தடயங்களை கிளர்வூட்டிப் பகுத்தலின் மூலம் பெறப்படும் கதிரியக்கம், சந்தேக நபரின் உடலின் அணுக்களை (உம்:- தலைமயிரிலுள்ள சில நுண் கனிமங்கள்) கிளர்வூட்டிப் பகுத்தலின் மூலம் பெறப்படும் கதிரியக்கத்தோடு ஒப்பிடுவதன் மூலம் குற்றவாளிகளை இனங்காணும் முறைகளும் மேல் நாடுகளில் இன்று பின்பற்றப்பட்டு வருகிறது

நிலத்தடியில் இருக்கும் பெற்றோலியம் போன்ற பொருட்களும் கதிர் இயக்கத்தினை பிரயோகிப்பதன் மூலம் கண்டு பிடிக்கப்படுகின்றன விவசாயத் துறையில், கதிரியக்க கனிமங்களை கரைசல்களாக்கி தாவரங்களினூடு செலுத்தும் போது அதிகளவிலான விளைபொருளைப்பெற முடிகிறதென விவசாய ஆராய்ச்சி நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். பயிர்களுக்கு எந்தப் பருவங்களில் உரங்களை இடவேண்டுமென்பதை, குறிப்பிட்ட கதிரியக்க கனிமங்களை உரத்தினூடு கலந்து தாவரத்துக்கு செலுததும் போது தாவர பாகங்களில் எக்காலத்தில் மேற்குறிப்பிட்ட கதிரியக்கம் தோன்றுகின்றது என்பதை அவதானித்தல் மூலம் அறிய முடிகிறது பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் உயிரினங்களை இனவிருத்தி கட்டுப்படுத்தும் கதிரியக்கத்துக்கு உட்படுத்துவதன் மூலம் அவற்றை மலடாக்கி அவ் உயிரின உற்பத்தி கட்டுப்படுத்தப்படுகிறது.

உணவுப் பண்டங்களை பதனிடுவதில் கதிரியக்கத்தினைக் கொண்டு செயலாற்றும் வழிமுறைகளும் இன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. வேறு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஆக்கபூர்வமான

பதனிடல் முறைகளினால் உணவின் சுவை, மணம், தோற்றம் பாதிக்கப்படுதல் இதன் மூலம் நிவர்த்தி செய்யப்படுகிறது. உதாரணமாக கோபால்ற்று - 60 இனைக் கொண்டு கோழி இறைச்சி, மீன்கள் போன்றவற்றினை பதனிடும் முறைகளும் இன்று ஆராய்வுக்குட்பட்டு வருகிறது. காய்கறிகளை அதிக நாட்கள் வைக்கும்போது விற்றமின்களினதும், புரதங்களினதும் செயற்பாடு குறைவடைவது, கதிரியக்கத்தினை செலுத்தி பாதுகாத்தலின் மூலம் தடுக்கப்படுகிறது.

மருத்துவ துறையில், கதிரியக்கம் கொண்ட சோடியம்-24ஐப் பயன்படுத்தி குருதிக்குழாயில் அடைப்பு ஏற்பட்டிருக்குமானால் அதை அறிய முடிகிறது குருதிதடைப்படும் இடத்தில் செலுத்தப்பட்ட சோடியம்- 24 இன் கதிர்வீசல் அதிகமாக இருப்பதை கொண்டு இது கண்டுபிடிக்கப்படுகிறது. எலும்பு மச்சைகளிலும் மண்ணீரல், கல்லீரல்களிலும் நோய்த் தாக்கத்தின் போது ஏற்படும் மாற்றங்களை அறிய இரும்பு - 59 எனும் கதிரியக்க கனிமம் பயன்படுகிறது. மேற்படி உறுப்புகளில் இரும்பு- 59இன் அளவினை கதிர்வீசலின் மூலம் அறிவதனால், அது மேற்படி கதிர்வீசல் கனிமத்தை உட்கிரகித்து பின் இழக்கும் ஒழுங்கிலிருந்து நோயினை அறியமுடியும் என விஞ்ஞான ஆய்வறிக்கைகள் கூறுகின்றன. மூளை போன்றசிக்கலான பகுதிகளில் புற்றுநோய் பீடித்திருப்பின் அயடீன் 131, கல்லியம் - 68 போன்ற திரியக்க கனிமங்களை செலுத்தும்போது அவை மூளையில் பாதிக்கப்பட்ட இடத்தினை சென்றடைகின்றன. அங்கிருந்து வெளிவரும் கதிரியக்கத்தினை நிழற்படம் எடுப்பதன் மூலம் பாதிக்கப்பட்ட இடம் கண்டறியப்படுகிறது.

புற்றுநோய் தீர்க்கும் பணியில் கோபால்ற் — 60 பயன்படுகிறது. தைரொயிட் சுரப்பியின் மிதமிஞ்சிய செயற்பாட்டினை அயடின் — 131 கதிரியக்க கனிமத்தை உணவுடன் உட்கொள்ளும் போது, அது தைரொயிட்டின் சுரப்பைக் கட்டுப்படுத்தும் காலத்தை அளவிடுவதன் மூலம், வைத்திய ஆராய்ச்சிகளிலும் கதிரியக்கம் பயன்படுகிறது. குருதிப் புற்றுநோய் (லுக்கேமியா) தீர்ப்பதில், வெண்குருதிச் சிறுதுணிக்கைகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கு, கதிரியக்க குருதி முறை மூலம் சீசியம் — 137அல்லதுகோபால்ற்று— 60 எனும் கதிரியக்க கனிமங்கள் பயன்படுத்தப்படுகின்றன.


வரதர் கதைமலர் 3 வெளிவந்துவிட்டது!

**பேக்கிரி முயலாரின் சாகசங்கள்**

டகழ்வாய்ந்த ஆங்கிலக்கதை தமிழில்: "சொக்கன்"

சிறுவர்கள் விரும்பிப்படிக்க ஏழு சுவையானகதைகள். ரூபா 12/-

(6465)

### தமிழீழ காவல்துறை

# பதவி வெற்றிடங்கள்

### உப பரிசோதகர் / காவலர் தரங்கள்

கல்வித்தகைமைகள்:- 8ஆம் வகுப்பு தொடக்கம் க. பொ. த. (உயர்தரம்) வரை.

உயரம்:- 5' 6"

வயது:- 18 தொடக்கம் 30 வரை

மேற்கூறிய தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 04-11-93ஆம் திகதி தொடக்கம் 20-11-93 ஆம் திகதி வரை பழைய பூங்காவிலுள்ள காவல்துறை அலுவலகத்திற்குச் சமுகம் தரவும். தபால் மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

பொறுப்பாளர்,
தமிழீழ காவல்துறை,
தமிழீழம்.

03 - 11 - 93

(சி 7845)

# GRATEFULLY REMEMBERED

***November 5th*** 1993



M. Selvaratnam
(Police Dept)
Died Nov. 5*th* 1989



Mr. T. Sri Pathmanathan
(Excise Dept)
Died. May 10*th* 1992

In Memory's Fragrant Garden We Relive The Love and Joy you Gave Us

Sangarapillai Road,
Manipay South.

Loved Ones
(In Eelam and Abroad)

(சி/7835)

### மதுரா பட்டு மகால்

★ ஆதரவாளர்களின் ஆவல் அறிந்த சேவை!
★ மங்கள வைபவங்களுக்கான பட்டுப் புடவைகள் !!
★ இறக்குமதி செய்யப்பட்ட ஆடைத் தினிசுகள் !!!

மதுராவின் வாடிக்கையாளர் பரிசுத் திட்டம்

1-ம் பரிசு தங்கப் பதக்கம்
2-ம் பரிசு ரூபா 5000/-
3-ம் பரிசு ரூபா 2500/-
பல ஆறுதல் பரிசில்கள்

மதுரா ஆதரவாளர்களின் சிட்டை இலக்கங்கள் அனைத்தும் பரிசுத்திட்டக் குலுக்கலில் 1994 சித்திரையில் சேர்த்துக்கொள்ளப்பட விருப்பதால் சிட்டைகளைப் பத்திரப்படுத்துங்கள்.

நன்றி.

75, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

(சி-7841)


### நினைவில் நீங்காத
### 7-ம் ஆண்டு அஞ்சலி



பிறப்பு
09-04-1961

வீரச்சாவு
05-11-1986

### மூத்ததளபதி மேஜர் கணேஷ்
(சித்திரவேல் சிற்றம்பலம் - கந்தளாய்)

திருமலையின் எரிமலை - இவன்
தீரம்மிகு பெருமலை
தலைநகரின் ஒருமலை - இவன்
தலைவரின் வழிமுறை

ஆண்டுகள் ஏழாகி - இவன்
அழிந்து நாளாகினும்
மனதுள் நிறைந்த-இவன்
மறவான் எமைவிட்டு

பிரிவால் வாடும்
பெற்றோர், சகோதரன்,
மைத்துனர், நண்பர்கள்

மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (6471)

### 1-ம் ஆண்டு நினைவு நாள்

பிறப்பு: 13 — 11 — 1970



வீரச்சாவு: 05 — 11 — 1992

### 2-ம் லெப். குகன்/நில்டன்
(சிதம்பரப்பிள்ளை குரு இந்திரகுமார்)

வளலாய் மண்ணிலுன் சரித்திரம் வளர்ந்தது
தமிழ் மண் காத்திடும் தீரம் விரிந்தது
கச்சை கட்டிக் களத்தில் நின்றாய்
இச்சை கொண்டாய் தமிழ்மண் விடியலில்
நீயுமோர் காவியமானாய்.

5-11-93 வெள்ளிக்கிழமை பகல் 12-00 மணிக்கு எமதில்லத்தில் நடைபெறும் நினைவு நாளில் நண்பர்கள், போராளிகள், உற்றார் உறவினர்கள், யாவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.


பெற்றோர் சகோதரர்கள்,
சதா சிதம்பரப்பிள்ளைக் குருக்கள்
மித்திரன் அம்மன்கோவில் பூசகரும்,
ஆதீனமும்.

துன்னாலை,
கரவெட்டி.

(6473)

சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர்
சங்கத்தின் ஆதரவில்

# நிதியுதவிக் காட்சியாக



**காலம்: 06-11-1993 சனிக்கிழமை**
**நேரம்: மாலை 6.00 மணி**
**இடம்: சாவகச்சேரி இந்துக்கல்லூரி மைதானம்**

பருத்திநகர் சாண்டோ எம். துரைரத்தினத்தின்
வீரதீரச் செயல்கள்

- நெருப்புப் புதைகுழியில் சில மணிநேரம் படுத்திருத்தல்.
- இரண்டு உழவு இயந்திரத்தை எதிர் எதிராக ஒரே நேரத்தில் உடலில் ஏற்றுதல்.
- 35 கிலோ எடையுள்ள இரும்புக் குண்டினை 7' உயரத்திலிருந்து வயிற்றில் ஏந்துதல்.
- மோட்டார் சைக்கிளை வாயால் தூக்குதல்.
- பாரங்கொண்ட கல்லை மார்பின்மேல் வைத்து சம்மட்டியால் அடித்து உடைத்தல்.
- 3'' 200 ஆணி அடிக்கப்பட்ட படுக்கை மீது படுக்க வைத்து மார்பின் மேலாகப் பாரம் உடைய உழவு இயந்திரத்தை ஏற்றுதல்.
- பொலிகை சிவா அண்ணா நடாத்தும் தீச்சுடர் சிலம்படி நிகழ்ச்சி.

எனவே அனைத்து மக்களும் இந்த அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

உங்கள் ஆதரவிற்கு நன்றி.

(5069) சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் சங்கம்

---

## சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்
## சாவகச்சேரி

வர்த்தக முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல் (106/8)
சம்பள அளவுத் திட்டம் 1005 — 1705 / 40×5 —50×10

(அத்துடன் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்)

மேற்படி பதவிக்கு கீழ்வரும் தகைமையுடைய ஆண் பாலார்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்து கல்விச் சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், அனுபவச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளுடன் ''பொதுமுகாமையாளர், சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம், சாவகச்சேரி'' என்ற விலாசத்திற்கு 21. 11. 93 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ சமர்ப்பித்து உறுதிப்படுத்தவும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின், சங்கக் காரியாலயத்தில் பார்வையிடலாம்.

**கல்வித்தகைமை**

1. கூட்டுறவுப் பணியாளரின் 9ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை அல்லது மேற்பார்வை மட்டத்திலான பதவியில் மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 10ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

2. வர்த்தக/தொழிற்துறை ஸ்தாபனம் ஒன்றின் முகாமை மட்டத்திலான பதவியும், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டதாரி.

அல்லது

3. கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம்/ (உயர்தரம்) க.பொ.த (உயர்தரம்) 3 பாடங்களிலான சித்தியுடன் சந்தைப்படுத்தல்/ வழங்கல்/ பொருள் விநியோகம் பொருட்களின் இறக்குமதி/ ஏற்றுமதி என்ற துறைகளில் வர்த்தக/ தொழிற்துறை ஸ்தாபனம் ஒன்றின் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**2. வயது 23 — 40**

**நிபந்தனைகள்:**

அ) விண்ணப்பதாரர் 2 வருடங்களுக்கு மேல் யாழ் மாவட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
ஆ) சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்,
இ) ஆங்கிலம் அல்லது சிங்களம் பேச, எழுத, வாசிக்க தெரிந்திருத்தல் விரும்பத்தக்கது.
ஈ) சங்கத்தால் நிர்ணயிக்கப்படும் பிணைப்பணம் செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும். (ரொக்கம், ஆதனம்)
உ) தெரிவு செய்யப்படுபவர் தொடர்ந்து மூன்று வருட காலத்தில் கடமை புரிவதற்காக சம்பந்த பத்திரத்தில் கையொப்பமிடல் வேண்டும்.
ஊ) விண்ணப்பபடிவத்துடன் கல்விச்சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், வதிவிட அத்தாட்சிப் பத்திரம், பிறப்புச் சான்றிதழ் அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.


குறிப்பு. சங்கப் பணியாளருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

பொதுமுகாமையாளர்,
சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்
சாவகச்சேரி.

30-10-1993
(சி-7823)

---

## 5-ம் ஆண்டு நினைவுப் பூக்கள்



**தாயோனாய் மண்ணில்:**
25-11-1951

**துரோகிகளால் விண்ணில்:**
5-11-1988

அமரர்
## ச. செல்வராசா அவர்கள்
[மாமா]
(முன்னாள் வர்த்தகசங்கச் செயலாளர், சாவகச்சேரி)

தமிழீழ மண்மீட்கத் தனயர்போ ராடுகையில்
தமிழுணர்வோ டருகிருந்து பணிசெய்தாய்
அமிழ்தான தமிழ்காக்க அல்லுபகல் நல்லுழைப்பை
அசையாது வழங்கிநின்றாய் — அடிவருடித்
தமிழ்த்துரோகக் குழுவதனால் அகிலத்தை நீதுறந்தாய்
அணையாத தீபமுனை அணைத்தனரே
தமிழுக்குத் தொண்டுசெய்வோர் சாவதில்லை சதிகாரர்
வெல்லவில்லை ஓடிவிட்டார் இன்று.

**அன்பில் நனைந்து—உன் ஆற்றல் புகழ்ந்து**
**ஐந்தாம் ஆண்டு நினைவுப் பூக்களை**
**உன் பாதங்களில் காணிக்கை செய்கிறோம்.**

செல்வராசா வீதி,
நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

– குடும்பத்தினர்

(6425)

---

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி
## கலாரேகா கதிர்காமத்தம்பி

**தாய் மடியில்:** 14-05-1974
**இறை அடியில்:** 20-10-1989

4ஆவது திதிநாள்: 5-11-1993

அன்பின் மகளே!
உன்பிரிவின் நீள்பயணம் இன்றோடு ஆண்டு
நான்காகி நீண்டு நெடிதோடிப் போனதம்மா!
இன்னும் எத்தனை எத்தனை ஆண்டோ?
துன்பியல் வேதனை தந்தெமை வாட்டுமோ?
பச்சிளங் குருத்து, பருவமது எய்தி
உச்சி குளிர; உள்ளங் குளிரப்
பூத்துக் குலுங்கும் புத்தெழில் வேளையில்
அத்து மீறியே அந்தகன் வந்துனை
வித்தை காட்டி வினையால் முடித்தானே!
போன நாளிலும் போகா நாளதிகம்!
ஆன மட்டும் அமைதி கண்டு
கூனப் பிறையோன் கூட்டும் அருளால் நீ
வானகச் சுகம்பெற வேண்டுகிறோம் மகளே!

குடும்பத்தினர்.

''அன்னை இல்லம்''
குரும்பசிட்டி, தெல்லிப்பழை.
05-11-93 (6478)

ஆக்கம்: அநுமித்திரன்

## சோமாலியாவில்

தொடங்குகிறார். அமெரிக்கரை நம்பி ஒரு காரியமும் செய்ய முடியாது ஏனென்றால் அடுத்து என்ன முடிவு எடுப்பார்கள் என்று அறிய முடியாது என்கிறார் அவர். அவரது பதவி மேற்குலக நாடுகள் தமது இயலாமையை மறைக்க பழியைப் போடும்பலிக்கடா போன்ற பதவிஎன்பதை அவர் இப்போது உணர்வதாக தெரிகிறது என்கிறார் இராசதந்திரி ஒருவர் இப்போது செயலர் தனது பணியை 120 மைல் வேகத்தில் காரொன்றினை செலுத்திக் கொண்டு அதேசமயம் அதில் பழுதுபார்க்கும் நிலைக்கு ஒப்பிடுகிறார். ஆனால் அவர் இப்பதவிக்காக போட்டி போட்டபோது அவரிற்கு இவ் உண்மை புரியவில்லை போலும்- மூன்றாம் உலகைச் (எகிப்து) சேர்ந்த வேட்பாளராக இருந்த போதும் முன்னர் எகிப்திய வெளிநாட்டமைச்சராக இருந்து மேற்குலக நல்லெண்ணத்தை நிரம்பவும் சம்பாதித்த பூட்ரோஸ்காலியை திறமையான நிருவாகி, சிக்கல்களைகளையெடுக்கவல்லவர் எனப் பாராட்டியே மேற்குலகம் அவரைத் தெரிவுசெய்ததுஎன்பது இங்கே சுட்டிக்காட்டப்பட வேண்டியது. இப்போது மேற்குலக நம்பிக்கையை இழந்து வரும் பூட்ரோஸ்காலி கூறியதைப் பாருங்கள். நான் அதிவிசேட பிரச்சினைகாரன் Super begsar என்னை குறை கூறி என்ன பயன் ? பாதுகாப்புச் சபை இருக்கிறது, வீட்டோ (தடுப்பு உரிமை) உரிமை இருக்கிறது.

அதைவிட்டு என்னை கண்டித்து பயன் இல்லை'' என்கிறார்.

ஐ நாச் செயலரை குறை கூறுவதை விடுத்து தற்போதைய உலகில் அமைதியை நிலைநாட்ட அதற்கேற்ப ஐ. நா தக்க வகையில் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும் என்கிற குரல் இப்போது வலுக்கிறது. பல்வேறு வல்லுனர்கள் கருத்துகள் இப்போது வெளிவருகின்றன. இவை யாவையுமே தற்போதைய அமைதி காக்கும் பணிகளை கடுமையாக குறை கூறி மாற்றங்களைக் கோருகின்றன. இவை குறித்த மேற்குலக நிலைப்பாடு என்ன என்பது தெளிவாக இல்லை. இதற்கிடையில் அமெரிக்காவோ சட்டிசுட்டது கைவிட்டது என்கிறது போல் தனது எதிர்காலஅமைதிப்பணிபங்கேற்பை குறித்து மிகக் கவலைப்படுவதாகத் தெரிகின்றது. பாதுகாப்பற்ற இடங்கட்கு — தனது படையினரை பலி கொடுக்கும் நாடுகட்கு— படைகளை அனுப்ப அமெரிக்கா தயங்கப் போகிறது என்பது தெளிவாகிவிட்டது ஏனென்றால் இவ்வாரம் கெயிட்டித் தீவில் மீண்டும் முன்னர் இராணுவத்தால் விரட்டப்பட்ட சனாதிபதி அரிஸ்டீட்டை பதவியேற்க செய்ய முன்னோடியாக அமெரிக்கா ஐ.நா. சார்பாக அனுப்ப இருந்த அறுநூறு இராணுவ மருத்துவர்களையும், பொறியியலாளர்களையும் இவ்வாரம் அனுப்பவில்லை. (அதற்கிடையில் கெயிட்டித் தீவிலும் ஐ. நா. எதிர்பார்த்த மாற்றம் நடைபெறவில்லை ) பொசுனியாவிலும் அமைதி உடன்பாடு ஒன்றை கண்காணிக்க அனுப்புவதாகச் சம்மதித்த 25 000 துருப்புக்களையும் அமெரிக்கா அனுப்பாமல் விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆகவே நிலைமை இன்று இப்படித்தான் இருக்கிறது. நாகரிகத்திலும், தொழில்நுட்பத்திலும் மேன்மையடைந்த நாடுகளை ஒரு சில கொள்ளைக் கூட்டங்கள் பணயம் வைப்பதா என மேற்குலகம் கூற சோமாலியர் பிறவிக் கொரில்லாக்கள் — முன்னர் இத்தாலி, பிரித்தானியா படித்த பாடத்தை இப்போது அமெரிக்கா கற்கிறது என இன்னொரு சாரார் கூற— அய்டீட்டால் பிடிக்கப்பட்ட அமெரிக்க இராணுவ வீரர் கூறியதைக் கவனியுங்கள் ''நான் சோமாலியாவில் படித்த சரித்திரப்பாடம் இதுதான். நீங்கள் சோமாலியாவில் வாழாவிட்டால் உங்களுக்கு அங்கு என்ன நடக்கிறது என்பதை அறியவே முடியாது'' என்பதுதான் அது. இது வரலாற்றுப் பாடத்தின் முதல் அரிச்சுவடி அல்லவா?

---

சன்மார்க்கசபை குரும்பசிட்டி

### மணிவிழா நிகழ்ச்சித்தொடர்

கருத்தரங்கு

## தமிழர் கலைகள்

(நுண்கலைகள் பற்றிய சிறப்பு ஆய்வு)

இடம்:- இராமநாதன் நுண்கலைப்பீடம் மருதனார்மடம்

காலம்:- 6 11-1993 சனிக்கிழமை காலை 8 மணி

தலைவர்:- திரு. ஆ. மகாதேவன் பி எஸ். ஸி.
(விரிவுரையாளர் - பலாலிஆசிரிய கலாசாலை)

தொடக்கவுரை:- திரு. புதுவை இரத்தினதுரை
(பொறுப்பாளர் கலைபண்பாட்டுக்கழகம்)

### கருத்துரைகள்

**கட்டடக்கலை**

திரு. செ. கிருஷ்ணராஜா எம். ஏ.
(முதுநிலை விரிவுரையளார், வரலாற்றுத்துறை யாழ்.பல்கலைக்கழகம்)

**சிற்பக்கலை**

கலாகேசரி ஆ. தம்பித்துரை
(முன்னாள் பிரதிக்கல்விப்பணிப்பாளர் சித்திரம்)

**ஓவியக்கலை**

பிரதிமைக் கலைமாமணி க. இராசரத்தினம்
(ஓய்வுபெற்ற கல்வி அதிகாரி சித்திரம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

வைத்தியகலாநிதி எஸ். பிரபாகரன்
ஏ. ரி. பொன்னுத்துரை
இணைச்செயலாளர்கள்

மணிவிழாச்சபை
குரும்பசிட்டி
(6446)

---


**விவசாயிகளே!**
**தொழிற்சாலை உரிமையாளர்களே!**
**இயந்திரப் பாவனையாளர்களே!**

## ஏங்கள் வளங்களில் எங்கள் கைகளில்

பெற்றோலிய எரிபொருள் பிரச்சினைக்கான குறைந்த செலவில் மாற்றீடாக வருகின்றது.




உங்கள்

- நீரிறைக்கும் இயந்திரங்களை இயக்க
- மின் பிறப்பாக்கியை இயக்க

ஆக்கிவாயு பிறப்பாக்கி

மரக்கரி அல்லது சிரட்டைக்கரி மட்டுமே
கொண்டு சக்தியைத் தரவல்லதுதான்.

இரகசியம் ஒன்றுமில்லை.
ஆக்கிவாயும் பிறப்பாக்கிகள் உங்களின்
சக்தி தேவைகளில் பெருமளவை
நிறைவேற்ற வல்லது. இவை சிரட்டை,
மர கரிகளிலிருந்து உங்கள் பெற்றோல்,
மண்ணெண்ணை, டீசல் இயந்திரங்களை
இயக்கவல்ல ஆக்கிவாயுவை உற்பத்தி
செய்கின்றன.

★ உங்கள் இயந்திரத்தில் எதுவித
மாற்றமும் செய்யாமலேயே ஆக்கிவாயுப்
பிறப்பாக்கிகளை இணைத்து
இயக்க முடியும்.
முதற்கட்டமாக வூல்சிலி (Wolseley)
இயந்திரங்களுக்குப்
பொருத்திக் கொள்ளலாம்.
பொருத்த வேண்டுமாயின் முன்கூட்டியே
பதிவு செய்து கொள்ளுங்கள்.

எல்லாநாட்களிலும் காலை 10மணிமுதல்
பிற்பகல் 2.30 மணிவரை ஆக்கிவாயுவில்
இயந்திரம் இயங்குவதை எமது அலுவலகத்தில்
பார்வையிடலாம்.

[சி/7838]

**எமது அலுவலகம்**

சக்திப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
காங்கேசன் துறை வீதி, தாவடிச் சந்தி, தாவடி.

# வடக்கில் நடப்பது என்ன? சிங்கள செய்தியாளர் முன்னுள்ள கேள்வி

'சிங்களச் செய்தியாளர்கள்' வடக்குநோக்கிய வருகை அண்மையில் திடீரென அதிகரித்துள்ளது. இவர்கள் ஆங்கில, சிங்கள மற்றும் வெளிநாட்டு செய்தி நிறுவனங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பினும், அண்மையில் யாழ்ப்பாணம் வந்த செய்தியாளர்களில் பெரும்பாலானவர்கள் சிங்களவரே ஆகும். இந்த வகையில் அண்மைக்காலத்தில் இவர்களின் வருகையில் அதிகரிப்பு காணப்படுகின்றமைக்கு காரணங்கள் இல்லாமல் இல்லை.

யாழ்ப்பாணம் வந்த இச் செய்தியாளர்கள் அனைவரும் தாம் முன்னர் வடபகுதிக்கு மேற்கொள்ளவிருந்த விஜயங்கள் பலவற்றை இராணுவம் தடுத்துவிட்டது என்றும், தற்பொழுதும் பெருமுயற்சியின் பின்னரே வருவதற்கான அனுமதி கிடைத்தது எனவும் தெரிவிக்கின்றனர். செய்தியாளர்களின் இக் கூற்றிலும் உண்மை இல்லாமலில்லை. ஆனால் ஒரு செய்தியாளர் அல்லது ஒரு பத்திரிகையைச் சார்ந்தவர்கள் இதனைக் கூறலாமா என்பது கேள்விக்குரியதே.

ஏனெனில் இரண்டாம்கட்ட ஈழப்போர் ஆரம்பமாகி இன்று சுமார் 40 மாதங்கள் கடந்து விட்டன. இக் காலப்பகுதியில் வெளிநாட்டு செய்தி நிறுவனமான பி. பி. ஸி யின் செய்தியாளர் பல தடவை வந்து போயுள்ளார். பி. பி. ஸியின் தொலைக்காட்சிப் பிரிவும் வந்துபோயுள்ளது அத்தோடு அவுஸ்திரேலிய செய்தியாளர்களும், வீடியோ படப்பிடிப்பாளர்களும் எனவெளிநாட்டவர் பலர் வந்து போயுள்ளனர். வந்துபோனவர்கள் சிலவேளை இராணுவத்தின் அனுமதியுடனும், சிலவேளை இரகசியமாகவும் இங்கு வந்து சேர்ந்தவர்கள் ஆகும்.

இந் நிலையில் சிங்களச் செய்தியாளர்கள் எவரும் ஏன் இவ்வாறான பெரும் முயற்சி எதையும் மேற்கொள்ளவில்லை? மேலும் விடுதலைப் புலிகள் இயக்கம் சிங்களச் செய்தியாளர் எவரும் வந்து போவதற்குத் தடை விதித்ததாகவும் இல்லை. ஆகையினால் சிங்களச் செய்தியாளர்கள் கடந்தகாலத்தில் வடபகுதிக்கு வராமைக்கு தனியாக இராணுவம் விதித்த கட்டுப்பாடாக மட்டும் இருக்க முடியாது. அவர்களின் எதிர்பார்க்கைகளும், நம்பிக்கைகளும் வேறாக இருந்தமையுமே காரணமாகும்.

இரண்டாம் கட்ட ஈழப் போர் ஆரம்பமாகியபோது வழமைபோலவே சிங்களப் பத்திரிகைகள்-ஓரிரண்டுதவிர- இராணுவத்திற்கு ஆதரவாக பெரும் குரலெழுப்பின. இராணுவத் தளபதிகளை நாட்டின் ஹீரோக்களாக உயர்த்த முனைந்தன. அத்தோடு இராணுவத்தரப்பின் செய்திகளையும் முழுமையாக நம்பின.

இந் நிலையில் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம்பற்றிய ஒரு பிழையான கற்பிதத்தை அவை சிங்கள மக்கள் மத்தியில் வளர்க்க முற்பட்டன. அதற்கென சிங்கள மக்களுக்கு உண்மைக்குப் புறம்பான, உணர்ச்சி யூட்டக் கூடியதுமான தகவல்களை வழங்கி அவர்களை மாயை ஒன்றிற்குள் சிக்கவைத்தன. ஆனால், இம் முயற்சியில் இப் பத்திரிகைகள் இறங்கியபோது தாமும் அதில் சிக்கிப்போனது தான் வேடிக்கையானதும் துயரமானதுமாகும். இறுதியில் சிங்களமக்களினால் மட்டுமல்ல, இப்பத்திரிகைகளினால் கூட யதார்த்த நிலையை மதிப்பீடு செய்ய முடியாத நிலை உருவாகியது.

இந் நிலையில் வடக்கில் இருந்து செல்லும் சில செய்திகள் அவர்களுக்கு ஆச்சரியம் அளிப்பவையாகவும் பிரமிப்பூட்டுபவையாகவும் இருந்தன. அவர்கள் எதிர்பார்த்திருந்த செய்திகளுக்கு எதிரானதும் மாறுபாடானதுமான செய்திகள் கிடைத்தபோது அவர்கள் குழப்பம் அடைந்தனர். சில வேளை ஆத்திரமும் கொண்டனர்.

இதற்கு சிங்கள, ஆங்கில பத்திரிகைகளில் எழுதிய இராணுவ-அரசியல்விமர்சகர்களும் பெரும் பங்காற்றினர். அவர்கள் ஒருதேசிய இனவிடுதலைப் போராட்டத்திற்கு எதிரான இராணுவவெற்றிஒன்று இலகுவில் ஏற்பட்டுவிடக் கூடியது என்ற நிலையில் தமது விமர்சனங்களை முன்வைத்தனர். அவர்கள் விடுதலைப்புலிகளையும் தமிழ் மக்களையும் வேறாக்கி இது ஒரு பயங்கரவாதப் பிரச்சினை எனச் சித்திரிக்கவும் முற்பட்டனர்.

இவ் வேளையில் 1991 ஆம் ஆண்டு ஆனையிறவுச் சமரில் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட ணிசமான இழப்பைத் தொடர்ந்து இராணுவம் தனது பிரசாரத்தை முடுக்கி விட்டது. விடுதலைப் புலிகள் தோல்வியின் விளிம்பில் உள்ளனர் என பெரும் எடுப்பில் பிரசாரம் செய்தனர். சிங்கள செய்தியாளர்களும் ஆனையிறவு இராணுவ முகாம் மீட்புடன் அதை முழுமையாக ஏற்றுக் கொண்டனர்.

இதற்கு ஆதரவாக இந்திய அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளும் இருந்தன. தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டதோடு வங்காள விரிகுடாவிலும், பாக்கு நீரிணையிலும் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தை இந்திய கடற்படை கட்டுப்படுத்தமுனைந்தது மேலும் இந்திய அரசும்-சிறிலங்கா அரசும் கூட்டாக தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக இணைந்து செயற்பட முற்பட்டன. இந்தியாவின் தீவிர எதிர்ப்பாளராக இருந்த அப்போதைய ஜனாதிபதி பிரேமதாசா இந்தியாவிற்கு நட்புக்கரம் நீட்டினார்.

இந் நிலையில் இராணுவ வெற்றி மிக விரைவில் எட்டப்படும் என்ற சிங்களச் செய்தியாளரின் நம்பிக்கை மேலும்வலுப்புட்டது. இராணுவத்தரப்பு வழங்கிய செய்திகளும் அதற்கு ஆதாரமாக இருந்தன. இது சிங்களச் செய்தியாளர்கள் தாம் வளர்த்த மாயைக்குள் தாமே சிக்கிக் கொண்டதாகவே இருந்தது.

இவ்வாறானதொரு நிலையில் 1991 இல் ஒப்பரேசன் வலம்புரி மூலமும், ஒப்பரேசன் பலவேகய II இன் மூலமும் யாழ் குடாநாடு இராணுவ முற்றுகைக்கு உள்ளாகிய போது தமிழீழத் தேசியப் போராட்டமும்விடுதலைப்புலிகளும் தமது அந்திமகாலத்தை நெருங்கிக் கொண்டதாகவே இப் பத்திரிகையாளர்கள் கற்பிதம் செய்துகொண்டார்கள் இராணுவத்தரப்பு தமது முற்றுகையைப் 'பெருமையாகப் பேசிக்கொண்டபோது பத்திரிகையாளரும் மகிழ்ச்சியில் திளைத்துப் போயினர். விடுதலைப் புலிகளின் கழுத்து நெரிக்கப்படுகின்றதென்றும் போத்தல் ஒன்றில் புலிகள் அடைக்கப்பட்டு விட்டனர் எனவும் விமர்சனம் செய்யப்பட்டது.

ஆனால் 1992 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் கடைப்பிடித்த புதியபோர் யுக்தியானது இராணுவத்தரப்பில் பெரும் சேதத்தை விளைவித்தபோதும் இராணுவத்தரப்பின் வெற்றி குறித்து சிங்களச் செய்தியாளர்கள் சந்தேகம் கொண்டிருக்கவில்லை. இராணுவத் தலைமைப் பீடத்தில் உள்ள சில குறைபாடுகளே இராணுவத்தின் இழப்பிற்குக் காரணம் என்ற ரீதியில் கற்பிதம் செய்து கொண்டதோடு, சிலதளபதிகளுக்கு எதிராகவும் சில தளபதிகளுக்கு ஆதரவாகவும் மாறி மாறி எழுத முற்பட்டன.

> சிங்களச் செய்தியாளர்களின் வடக்கு நோக்கிய வருகை திடீரென அதிகரித்துள்ளது. இராணுவ வெற்றியில் அவர் கொண்டிருந்த மாயை கலையத் தொடங்கியதே இதற்கான காரணமாகும். மூன்று வருடத்திற்கு மேலான பொருளாதார, இராணுவ முற்றுகையின் பின்னும், தமிழ் மக்களும் விடுதலைப்புலிகளும் எவ்வாறு தாக்குப் பிடிக்கின்றார்கள், போரை தொடர்ந்து நடத்துகின்றார்கள் என்பது அவர்களுக்குப் புரியாத புதிராகவே இன்றும் உள்ளது.

ஆனால், 1992 ஓகஸ்ட் எட்டாம் திகதி லெப் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவும், மேஜர் ஜெனரல் விஜய விமலரெட்ணவும் கொல்லப்பட்டமையானது சிறிலங்கா இராணுவத் தலைமைக்கு கொடுத்த அதிர்ச்சியைப் போன்றே சிங்களப் பத்திரிகையாளருக்கும்அதிர்ச்சி அளிக்கும் ஒன்றாகவும், அவர்களின் இராணுவ வெற்றி குறித்த கனவைக் கலைக்கும் அம்சமாகவும் இருந்தது. இதன்பிற்பாடு, இராணுவத்தரப்பு செய்திகள் குறித்தும், இராணுவ வெற்றி குறித்தும் சில விமர்சனங்களையும் அவை முன்வைக்கத் தொடங்கிய போதும், இராணுவ வெற்றி பெற வேண்டும் என்பதிலும், இராணுவ தலைமையைச் சீர் செய்வதன் மூலமும், புலிகளை இராணுவ நடவடிக்கைகள் மூலம் வெற்றி கொள்ளலாம் என்ற நிலையில் இருந்து அவர்கள் விடுபடவில்லை.

ஆனால், அதன் பின்னர் கட்டைக்காட்டிலும், மண்கிண்டி மலையிலும் இராணுவத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பானது செய்தியாளர்களின் நம்பிக்கைத் தன்மை சிதறடிப்பவையாகவே இருந்தன. இனப்பிரச்சினைக்கு இராணுவ வெற்றி என்பது அத்துணை இலகுவானது அல்ல என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகி வந்தவேளை ஒப்பரேசன் யாழ்தேவியில் இராணுவம் அடைந்த தோல்வி அதனை மேலும் உறுதிப்படுத்தியது.

இந்நிலையில்தான், எதிர்த்தரப்பு - அதாவது தமிழ் மக்களும், விடுதலைப் புலிகளும் எவ்வாறு இப்போரை எதிர்கொள்கின்றார்கள் என்பது பற்றி அறிந்துகொள்ள சிங்களப் பத்திரிகைகளும் செய்தியாளர்களும் ஆவல் கொண்டனர்.

அதாவது மூன்று வருடத்திற்கு மேற்பட்ட பொருளாதார முற்றுகை, இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட இராணுவ முற்றுகையும், கடற்பிராந்தியத்தில் இந்தியாவின் நெருக்குதல்கள் இவை யாவற்றையும் தாண்டி எவ்வாறு தமிழீழப் போராட்டம் உயிர் வாழ்கின்றது என்ற அதிசயத்தை அறிந்து கொள்வதே அவர்களின் குறிக்கோளாக மாறியது அதாவது, தமிழீழ விடுதலைப் போர் குறித்து ஒருதரப்பு வழங்கிய தவறான தகவல்களை மட்டும் அறிந்து கொண்டவர்கள், அதற்கு மறுபக்கமும் ஒன்று உள்ளது என்பதை விளங்கிக் கொண்டனர்.இதனை அறிந்துகொள்ள சிங்களச் செய்தியாளர்முற்பட்டமையே அவர்களின் வடபகுதிபடைஎடுப்பிற்குக் காரணமாகும்.

இவ்வடபகுதி விஜயத்தின் மூலம் சிங்களச் செய்தியாளர்கள் கடந்த காலத்தில் அவர்கள் உணரத் தவறிய சில யதார்த்தங்களைப் புரிந்து கொண்டிருக்க முடியும். அதில் தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டம் என்பது ஒரு பயங்கரவாத' போராட்டம் அல்ல. அது தேசிய இனத்தின் விடுதலை உணர்வின் எழுச்சி வடிவம் என்பதும், எனவே எந்த நெருக்கடியாலும் இது தோற்கடிக்கப்பட முடியாதது என்பதையும்புரிந்து கொண்டிருக்க முடியும்மேலும்போர் நடவடிக்கைகள் மூலம் இராணுவம் இதுவரை சாதித்தது என்ன என்பதையும் சுலபமாக விளங்கிக் கொண்டிருக்க முடியும்.

ஆனால், சிங்கள அரசியல் வாதிகளுக்கும், இராணுவத்தினருக்கும்இதுஎப்பவோதெரியும். ஆனால், அவர்கள் உண்மையை சிங்கள மக்களுக்கு எப்பொழுதும் கூறவில்லை. பத்திரிகையாளர்களும் இதனை கணிசமாக அறிந்திருப்பினும்மக்களுக்கு அதைத் தெரிவிக்க விரும்பவில்லை. ஆனால், பத்திரிகையாளர்கள்

**ஜெயராஜ்**

தற்பொழுது முழுமையாக யுத்தத்தின் நிலையை அறிந்துள்ளார்கள். ஆனால் இனி யாவது அவர்கள் உண்மைகளை வெளியிடுவார்களா? வெளியிடமுடியுமா? இதற்கு செய்தியாளர்கள் விரும்பினும் பத்திரிகை உரிமையாளர்கள் இடம் விடுவார்களா?

இக் கேள்வியைநாம் எழுப்ப வேண்டிய அவசியமும் உண்டு. ஏனெனில் அண்மையில் யாழ். வந்து திரும்பிய செய்தியாளர்கள் சிலர் எமது செய்தியாளரிடம் பேசிய போது, இனவாதம் பேசாமல் தென்னிலங்கையில் பத்திரிகை நடத்த முடியாது எனக் கூறியமையே இதற்கான காரணமாகும்.

## தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு-1993இன் சிறப்புத்தேர்வின் நேரஅட்டவணை

| நாள் | தினம்/திகதி | முற்பகல் வேளை | பிற்பகல் வேளை |
|---|---|---|---|
| 1. | 93-11-08 திங்கள் | 8.ஆங்கிலம் I 8-30—9-30 II 9-45—11-45 | 5-7 சமயம் I 1-00—2-00 II 2-15—4-15 |
| 2. | 93-11-09 செவ்வாய் | 2.கணிதம் II 8-30—11-30 | 2. கணிதம் I 1-00—2-00<br>9-11 அழகியல்- I 2-15—3-15 |
| 3. | 93-11-10 புதன் | 3.விஞ்ஞானம் II 8-30—11-30 | 3. விஞ்ஞானம் I 1-00—2-00<br>9-11 அழகியல் II 2-15—4-15 |
| 4. | 93-11-11 வியாழன் | 4.வரலாறும் சமூகக்கல்வியும் II 8-30—11-30 | 4. வரலாறும் சமூகக்கல்வியும் I 1-00—2-00<br>9- அழகியல் (சித்திரம்) III 2-15—4-15 |
| 5. | 93-11-12 வெள்ளி | 12-20 தொழில்நுட்பப் பாடம் I 8-30—9-30 II 9-30—11-30<br>21.வர்த்தகமும் கணக்கியலும் II 8-30-11-30 | 21. வர்த்தகமும் கணக்கியலும் I 1-00—2-00 |
| 6. | 93-11-14 ஞாயிறு | 1.தமிழ் மொழியும் இலக்கியமும் I 8-30—9-15 II 9-45—11-45 | 1. தமிழ்மொழியும் இலக்கியமும் III 1-00—3-00 |

சென்றமாதம் நடைபெற்ற தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வில் இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு மேற்குறிப்பிட்ட நேர அட்டவணைப்படி தேர்வு நடைபெறவிருப்பதால் பளை, தென்மராட்சி, அச்சுவேலி பகுதியில் தேர்வில் தோற்றமுடியாதமாணவர்கள் அதிபரின் அனுமதிக் கடிதத்துடன் பாடசாலைக்கு அறிவிக்கப்படும் அறிவுறுத்தல்படி தேர்வில் தோற்றலாமென தேர்வு ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## பரிசில் நாள்

சாவகச்சேரி இந்துக்கல்லூரி பரிசில் நாள் இன்று முற்பகல் 9.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும். இதில் முதன்மை அதிதியாக கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கமும் சிறப்பு அதிதியாக பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி பு. கணேசலிங்கமும் விசேட அதிதியாக அரசியல் துறைப்பொறுப்பாளர் திரு ப. தமிழ்ச் செல்வனும் கலந்து கொளவர்.

### இறுதிப் போட்டிகள்

யாழ்.மாவட்ட பாடசாலைகள் தொடர்பாக மாணவர்களுக்கான பட்மின்டன் இறுதி நிலைப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். இறுதிநிலைப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டோர் குறித்த நேரத்திற்கு சமுகமளிக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

## வகுப்புக்கள் நடைபெறா

தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வின் விஞ்ஞான செயன்முறைத் தேர்வு 6, 7 - 11-93 சனி, ஞாயிறு ஆகிய இரு நாட்களிலும் நடைபெற இருப்பதால் சகல தனியார் கல்வி நிலையங்களிலும் 6 ஆம்ஆண்டு தொடக்கம் 13 ஆம் ஆண்டு வரை கணித விஞ்ஞான பாடங்களை மட்டும் மேற்கூறிய இரு நாட்களிலும் வகுப்புக்களை நடத்தாமல் ஒத்துழைக்குமாறு யாழ்மாவட்ட தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் கேட்டுக் கொண்டுள்ளது.

### மாவீரர் நாள்

மாவீரர் நாளை அனுஷ்டிக்கும்படி அழைப்பு விடுக்கும் வகையிலும் அமைந்த பலரகத்திலான பதாகைகள் வட தமிழீழத்தின் பல்வேறு பிரதான வீதிகள் தோறும் கட்டப்பட்டுள்ளன. யாழ். குடாநாட்டில் விலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி ஆகிய பகுதிகள் எங்கும் இவ்வாறான பதாகைகள் கட்டப்பட்டிருப்பதை அவதானிக்க முடிந்தது. சுன்னாகத்தில் பாரிய பந்தலொன்றுஅமைக்கப்பட்டுவருகிறது

மேலும் மாவீரர் நாளை அனுஷ்டிப்பதற்காக பல்வேறு தொழிற்சங்கங்கள் மற்றும் பொதுசன அமைப்புக்கள் ஆகியவையும் தயாராகி வருகின்றன (க)(9)

## கலந்துரையாடல்

யாழ். கல்விக் கோட்டத்திலுள்ள ஆண்டு 8ற்கு மேற்பட்ட பாடசாலைகளினது விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் பாடசாலைப் போசக ஆசிரியர்கள், விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பின் பாடசாலை ரீதியாக பொறுப்பாகவுள்ள மாணவர்கள், பாடசாலை மாணவ முதல்வர்கள் ஆகியோரிற்கான கலந்துரையாடல் இன்று நண்பகல் 12.00 மணிக்கு யாழ்ப்பாணம் 'நாவலர்' மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் மேற்படி அனைவரையும் கலந்துரையாடலிற்கு அனுப்பிவைப்பதன் மூலமாக இக்கலந்துரையாடல் சிறப்புற அமைய ஒத்துழைப்பு நல்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்துப் பாடசாலை அதிபர்களையும் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு கேட்டுள்ளது.

★

வெட்டுப்புள்ளிகளால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. கடந்த புதன்கிழமை கருத்தரங்கில் கலந்துகொள்ளாத மாணவர்கள் இதில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

## 12-ம் திகதி செயன்முறைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

1993 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க. பொ. த (உ/தர) பரீட்சையின் கர்நாடக சங்கீதம் மற்றும் பரதநாட்டியம் ஆகிய பாடங்களிற்கான செயன் முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 12 ம் திகதி முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளை எதிர்வரும் 8 ஆம் திகதி யாழ் கல்வித்திணைக்களத்தில் இருந்து சேகரித்து பரீட்சார்த்திகளுக்கு விநியோகிக்கும் வண்ணம் அதிபர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்படுமெமன யாழ் பிரதேச கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

கர்நாடக சங்கீதம் அறை இலக்கம் 01 இலும் பரதநாட்டியம் அறை இலக்கம் 02 இலும் நடைபெறவுள்ளன. (பா)

### செயற்பாடு அதிகரிப்பு

தமிழ் நாட்டில் குறிப்பாக கரையோரப் பகுதிகளில் புலிகளின் நடவடிக்கைகள் தொடர்ந்து இருந்து வருகின்றன என்று தமிழக சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

சென்னையில் செய்தியாளரிடம் பேசிய அவர், மாநில அரசு அந்தத் தீவிரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தவறுகிறது என்றும் தெரிவித்தார்.

## அடுத்தவாரம் மட்டும் 'நரோமா' சேவை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கான பயணிகள் கப்பற்சேவை எதிர் வரும் எட்டாம் திகதி வரை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. நவம்பர் முதலாம் திகதியுடன் பயணிகளை ஏற்றும்பணியில் ஈடுபட்டிருந்த 'நரோமா' கப்பல் சேவையில் ஈடுபடாதென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றமே இதற்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது. நாளை சனிக்கிழமை 122 பயணிகள் திருமலையிலிருந்து யாழ்ப்பாணம் மற்றும் தீவகப்பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர். அத்துடன் 8ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கான பயணிகள் மட்டும் ஏற்றிச்செல்லப்படவுள்ளனராம்.

## ஜேர்மன் உதவியுடன் 501 குடிசைகள் அமைப்பு

(நமது நிருபர்)

ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு உதவித்திட்டத்தின் கீழ் யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்கள் அகதிகளுக்கென 501 குடிசைகளை அமைத்துக் கொடுத்துள்ளதுடன் 1188 குடிசைகளைத் திருத்திக் கொடுத்துள்ளன.

மேற்படி உதவித்திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்திற்கென கடந்த யூன் மாதமளவில் 70.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. இதன்படி கடந்த மூன்று மாதங்களில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், வை. எம் சி ஏ., அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், அகதிகள் புனர்வாழ்வு நிதியம் என்பன முறையே 225, 95, 99, 82 குடிசைகளை புதிதாக அமைத்துக் கொடுத்துள்ளன.

மேலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 353, வை எம சி ஏ. 433, ரி. ஆர். ஆர். ஒ 402 குடிசைகளையும் திருத்திக் கொடுத்துள்ளன.

இதேவேளை சாவகச்சேரியில் அறவழிப்போராட்டக் குழு 10 ஒன்று கூடல் மண்டபங்களை அமைத்துக் கொடுத்துள்ளது. இந்நிறுவனங்களால் தற்போதுள்ள அகதிமுகாம்களில் 200 மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு முடியும் தறுவாயில் உள்ளதாக தெரியவருகிறது அத்துடன் 200 குழாய்க்கிணறுகள் துவக்கத் திட்டமிடப்பட்டுள்ளபோதிலும் அதற்கான பொருள்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால் இதன் வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட அதிகாரி தெரிவித்தார். இதுவரை மூன்று கிணறுகளே அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது (ச, சி)

### மகளிர்

தொடர்ந்து இலங்கையின் உள்ளோ அல்லது இலங்கையின் வெளியில் இருந்தோ தமிழ்மக்கள் இராணுவக்கட்டுப்பாடுள்ள பகுதியில் குடியேற்றப்படுவதை விடுத்து அவர்களின் சுயவிருப்பத்தின் கீழ்த்தான் குடியேற்றப்படவேண்டும் என்பதை தமது அமைப்பு விரும்புவதாகத்தெரிவித்தார்.

இவ்வேளையில்இவ்வாறான நடவடிக்கை வருந்தத்தக்கது என அவர் மேலும் தெரிவித்தார்.

## குமணவிற்கு பதில் சிறிய கப்பல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிற்கான அத்தியாவசிய உணவு மற்றும் பொருள்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டுவந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட ''குமண'' கப்பலிற்குப் பதிலாக சிறிய கப்பலொன்று சேவைக்கமர்த்தப் படவுள்ளது.

''குமண''கப்பலின் ஒப்பந்த காலம் முடிவடைந்தமையைத் தொடர்ந்து இம் முறையுடன் அதன் சேவை முற்றுப் பெறுகின்றது.

இதனை அடுத்தே அளவில் சிறிய ஒரு கப்பலொன்று சேவைக்கு ஈடுபடுத்தப்படவுள்ளது. இதன் சேவை கிழமைக்கு இரண்டு தடவை நடைபெறும் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (பா),(நி)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**04-11-93**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11515

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்:

இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

22 6163, 27 4023, 28-9449, 26 3495 41-2509

## அறிவித்தல்

### ஜெய் பிரேம சாந்தி

இத்தாற் சகலருமறிய சுன்னாகம் திருமதி பாக்கியலட்சுமி நடராஜா ஆகிய நான் அருள்மிகு சுவாமி பிரேமானந்தா அவர்களால், சிறீ பிரேமானந்தா ஆசிரம வடபிரதேச ஒருங்கிணைப்பாளராக 18 08 93 முதல் நியமிக்கப்பட்டுள்ளேன். ஆசிரம சம்பந்தமான விடயங்கள் பற்றி எம்முடன் தொடர்பு கொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றேன்.

ஜெய் பிரேம சாந்தி.

தம்பி குமார் வீதி,
எரிபொருள் விற்பனை
நிலைய அருகாமை,
சுன்னாகம்.

திருமதி பாக்கியலட்சுமி
நடராஜா

(6488)

## தமிழ் மொழித்திறன் தேர்வு

தமிழ்மாமன்றம் நடாத்தும் இத் தேர்வு 06-11-93 சனிக்கிழமை நடைபெற இருந்தது தவிர்க்க முடியாத காரணத்தால் இது14-11-93 ஞாயிற்றுக்கழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

–நன்றி.
பொதுச்செயலாளர்
ருபாலை.

[6483[

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தங்கம்மா நாகராசா

(மணியகாரன் வீடு வேலணை)

வேலணை கிழக்கைச் சேர்ந்த திருமதி தங்கம்மா நாகராசா 2- 11 - 1993இல் இலண்டனில் காலமானார் இவர் ஓய்வுபெற்ற அதிபர் இளையதம்பி நாகராசா அவர்களின் அன்புமனைவியும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - செல்லம் தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற இளையதம்பி - பாக்கியலட்சுமி தம்பதிகளின் மருமகளும், மகாதேவன்,(பொறியியலாளர் அவுஸ்திரேலியா),இராசமணிராணி (இலண்டன்), சற்குணசீலன் (கணக்காளர், அவுஸ்திரேலியா), சற்குணராணி (இலண்டன்) ஆகியோரின் தாயாரும், தேவி (அவுஸ்திரேலியா), டாக்டர் பத்மநாதன் (இலண்டன்), உஷா பிரியதர்சினி (அவுஸ்திரேலியா), ஜெயவரதன் (கணக்காளர் இலண்டன்) ஆகியோரின் மாமியாரும், ஓய்வுபெற்ற ஆசிரியைகள் திருமதி நாகரத்தினம் பொன்னுத்துரை, செல்வி சரஸ்வதி ஆகியோரின் சகோதரியும்,காலஞ்சென்ற ஓய்வு பெற்ற அதிபர் இராசரத்தினம், ஓய்வு பெற்ற ஆசிரியர் விஜயரத்தினம், திருமதி பஞ்சரத்தினம் நாகராசா நவரத்தினம், திருமதி தவமணிதேவி, மகேஸ்வரன் ஆகியோரின் அண்ணியும், மயூரன், மீனா, தேவகுமாரன், கஜேந்திரகுமாரன், லாவண்னியா, ஆரணி, சுஜந்தன், பிரசாந்தன் ஆகியோரின் பேர்த்தியும், ஓய்வு பெற்ற அதிபர் பண்டிதர் அ. பொன்னுத்துரை அவர்களின் மைத்துனியும் ஆவார். உற்றார் உறவினர் நண்பர்களுக்கு ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகிறோம்.

தகவல்:
இ. விஜயரத்தினம்,
(மைத்துனர்)

தேவகுமார் வீதி,
71/9A, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

(6486)

### திருமதி வைத்திலிங்கம் அன்னபூர்ணம்

207, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்த வைத்திலிங்கம் அன்னபூர்ணம் 4 11 93 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்புப் பாரியாரும், கிருஷ்ணமூர்த்தி, சண்முகநாதன் (கொழும்பு), தையல்நாயகி (ராதா ஆர். வி. ஜி.), கமலாசனி (விஜயா ஆர். வி. ஜி.) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சண்முகராசா, தனராசா, மனோன்மணி, உதயகுமாரி (மலர், கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும், வத்சலன் (கனடா), யசோதா, காலஞ்சென்ற சத்தியசீலன், சரவணபவான், ஜம்புக்கேஸ்வரி, நகுலேஸ்வரன், சாந்தினி (நோர்வே), சாந்தசொரூபன் (சுவிஸ்), ரஞ்சினி [கொழும்பு], சித்தி விநாயகம், கௌரி, குமரன், நந்தினி [ஈழநாதம்], லட்சுமி ஆகியோரின் அன்பு பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 4 11-93 அன்று அவரது இல்லத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்,

தகவல்.
நந்தினி [ஈழநாதம்]

[சி-7854]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.